Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12



கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி.
வவுனியா.
T.P.-024-2222464
இல:134. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225937
(சி-12760)

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி-22 | 07-09-2005 | புதன்கிழமை | ஓசை-202

# சிறிலங்கா இராணுவச் சீருடையணிந்தோர்

# புலிகளின் காவல் நிலை மீது தாக்குதல்!

## வாகரையில் மூன்று போராளிகள் வீரச்சாவு: ஐவர் காயம்

(மட்டக்களப்பு)

*விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியான வாகரைப்பிரதேசத்தில் கட்டுமுறிவு என்ற இடத்தில் உள்ள விடுதலைப்புலிகளின் காவல்நிலை மீது சிறிலங்கா இராணுவ உடை தரித்த ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் மூன்று போராளிகள் வீரச்சாவைத் தழுவினர். ஐந்து பேர் படுகாயமடைந்தனர்.*

கனரக ஆயுதங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலை நடத்திய ஆயுததாரிகள் தாக்குதல் முடிந்ததும் சிங்கபுர சிறிலங்கா இராணுவ முகாமைச் சென்றடைந்ததாகத் தெரியவருகிறது.சிங்கபுர இராணுவமுகாம் கட்டுமுறிவிலிருந்து மேற்காக மூன்று கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

இதேவேளை இத்தாக்குதல் குறித்து உள்ளூர் செய்தியாளர்களிற்கு கருத்துத் தெரிவித்த வெலிக்கந்த இராணுவத்தினர் இத்தாக்குதல் கருணா குழுவைச் சேர்ந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இரு தமிழ் இளைஞர்களின் சடலம் ராகமையில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

ராகமையில் இரு தமிழ் இளைஞர்களின் சடலம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கைகால்களும், கண்களும் கட்டப்பட்ட நிலையில் இரு இளைஞர்களின் சடலங்கள் நேற்று முன்தினம் காலை 7.30 மணியளவில் ராகம ஷின்கெந்தூவ வீதியில் வைத்து பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட இளைஞர்களில் ஒருவர் கிண்ணியா ஆலங்கேணியைச் சேர்ந்தகிருபன் ராஜ்ரூபன் (வயது-23) என்றும் மற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

கடந்த 30ஆம் திகதி 32ஆம் கட்டை பிள்ளையார் கோயிலடி என்னும் இடத்தில் இனந்தெரியாத தேச விரோதக்குழுவினரின் தாக்குதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

- கப்டன் - றீகன் / பரமகுணம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அரசியல்துறை செயலகங்களுக்குள் அம்பாறையில் இராணுவம் புகுந்து அடாவடி!

### ஆவணங்கள் அபகரிப்பு, தீவைப்பு

அம்பாறை மாவட்டம் கல்முனை பாண்டிருப்பில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைச் செயலகத்தினை நேற்று மதியம் 12 மணியளவில் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் செயலகத்தினுள் சோதனைகளையும் மேற்கொண்டனர். அத்தோடு அங்கிருந்த ஆவணங்களையும் இராணுவத்தினர் எடுத்துச் சென்றுள்ளனர்.

இதேவேளை மேற்படி செயலகத்திற்கு அருகில் வசித்து வந்த 55 வயது மதிக்கத்தக்க வல்லிபுரம் என்பவரையும் இராணுவத்தினர் கைது செய்துகொண்டு சென்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

.அதேவேளை நேற்று முற்பகல் 11.30 மணியளவில் அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் அரசியல்துறை செயலகத்தினையும் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினரும் அவர்களுடன் வருகை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் இரு தாக்குதல்களில் இரு படையினர் உட்பட 4 பேர் காயம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் நேற்றிரவு இடம்பெற்ற இரு கைக்குண்டுத் தாக்குதல்களில் இரு படையினர் உட்பட நால்வர் காயமடைந்தனர்.இரவு 7.30 மணியளவில் அலஸ் தோட்டத்தில் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டு வீச்சில் இரு படையினர் காயமடைந்தனர்.

இரவு 9.30 மணியளவில் அபயபுர எனும் இடத்தில் இராணுவக் காவலரண் நோக்கிக் கைக்குண்டு வீசப்பட்டதில் இருவர் காயமடைந்தனர். (32)

## நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்பே சனாதிபதித் தேர்தல் குறித்து அறிவிப்பு

(கொழும்பு)

சனாதிபதித்தேர்தல் செலவீனத்திற்கான நிதிஒதுக்கீடு செய்யப்படாமையால் தேர்தலுக்கான திகதியை அறிவிப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தேர்தலுக்கான நிதி ஒதுக்கீடு செய்வதற்கு பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் அவசரகாலச் சட்டத்தை வரும் 13 -ஆம் திகதி நீடிக்க வேண்டியும் உள்ளதால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாராளுமன்றத்தை விசேடமாகக் கூட்டி நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்ட பின்னரே தேர்தல் திகதி அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (32)

## ஜே.வி.பி. விதித்துள்ள நிபந்தனைகள் போருக்கு வழி வகுக்கும்!

### - ஐ.தே.க. வருடாந்த மாநாட்டில் ரணில்

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு ஜே.வி.பி. நிபந்தனை விதித்துள்ளது என்பது போருக்கு வழிவகுக்கும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க சாடியுள்ளார்.

சிறிகோத்தாவில் நேற்று நடைபெற்ற ஐ.தே.கவின் 59 ஆவது ஆண்டு கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்று பேசுகையில்; ஜே.வி. பிக்கும் சுதந்திரக்கட்சிக்கும் இடையேயான உடன்பாடு சர்வதேச சமூகத்திலிருந்து சிறிலங்காவை தனிமைப்படுத்தும்.

ஜே.வி.பி யின் நிபந்தனைகள் போருக்கு அழைப்பு விடுத்துள்ளது. சிறிலங்காவில் இனியொரு போர் நடந்தால் பேரழிவை ஏற்படுத்திவிடும் என்றார். இவ் ஐ.தே.க. கூட்டத்தில் அக்கட்சியின் நூற்றுக்கணக்கான பிரதேசத் தலைவர்களும், கட்சித்தொண்டர்களும் பங்கேற்றனர்.

இதேவேளை, விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இப்பொழுது ஒரு போரை முன்னெடுத்தால் கூட அது நியாயமானது என சர்வேதேசம் அங்கீகரிக்க வேண்டியகாலம் வந்திருக்கின்றது என ஐ.தே. கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ராஜிதசேனாரத்ன கூறியுள்ளார்.

அரசாங்கம் தொடர்ந்தும் மக்களை ஏமாற்றிக் கொண்டி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி யுடன் ராஜபக்ஷவின் கூட்டு தமிழ் மக்களின் அபிலாஷைக்கு எதிரானது!

### - ஜோசப் பரராஜசிங்கம்

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பி யுடன் கூட்டுச்சேர்ந்திருப்பது தமிழ்மக்களின் அபிலாஷைகளுக்கு எதிரான ஒரு செயற்பாடென தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கூறியுள்ளார்.

நடைபெறவுள்ள சனாதிபதித்தேர்தலில் ஜே.வி.பி பன்னிரண்டு நிபந்தனைகளுடன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்ததை அடுத்து நடைபெற்ற கருத்துப்பகிர்வின்போதே ஜோசப் பரராஜசிங்கம் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு இது தொடர்பாக மேலும் கூறுகையில்; ஆரம்பம் முதலே ஜே.வி.பி யுத்த நிறுத்த உடன்படிக்கையை எதிர்த்தது. அதேபோன்று பேச்சுவார்த்தையையும் முழுமையாக எதிர்த்தது. அத்துடன் இடைக்கால நிர்வாக சபையையும் எதிர்த்தது. பொதுக்கட்டமைப்பைக் கூட முழுமையாக அது எதிர்க்கின்றது. அதேபோன்று ஜே.வி.பி சமஷ்டி அமைப்பைக் கூட முழுமையாக எதிர்க்கிறது.

இப்படியான ஒரு கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து அவர்களுடன் ஒரு ஒப்பந்தம் கைச்சாத்திட முன்வருவது தமிழ்மக்களுக்கு விரோதமான ஒருசெயல் என தான் கருதுவதாகவும் அவர் கூறினார்.

பொதுக்கட்டமைப்பு நீக்கப்படவேண்டும் அதேவேளை இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கை மீளாய்வு செய்யப்பட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுட்கால தலைவர் பதவி சந்திரிகாவால் நிராகரிப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆயுட்கால தலைவர் பதவியை சந்திரிகா குமாரதுங்க நிராகரித்துள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இது குறித்து விவாதிக்கப்பட்டது.

சந்திரிகா குமாரதுங்கவை ஆயுட்காலத் தலைவராக நியமிக்கும் யோசனை இக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

ஆனால் சுதந்திரக் கட்சி சனநாயகக் கட்சி. நான் கட்சி உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவதையே விரும்புகிறேன். அதனால் ஆயுட்காலத் தலைவராக நான் பொறுப்பேற்கமாட்டேன் என்று சந்திரிகா கூறியுள்ளார்.

இக்கூட்டத்தில் சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்கள் பங்கேற்றனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கடந்த கால வரலாற்றில் இதுவரை ஆயுட்கால தலைவராக எவரும் பதவி வகித்ததில்லை என்று அக்கட்சியினர் கூறினர்.

## வரிவிளம்பரம்

*பொத்தகசாலைக்கு ஆள் தேவை*

வன்னிப்பகுதியில் உள்ள அறிவமுது பொத்தகசாலையில் பணிபுரிய ஆண்கள் தேவை. கல்வித்தகைமையுடன் கிளிநொச்சி அறிவமுதுக்கு வரவும். உணவு, தங்குமிட வசதி உண்டு (6687)

## கணினி இயக்குனர் தேவை

போட்டோசொப், பேச்மேக்கர் ஆகியவற்றில் முன் அனுபவம் உள்ள ஆண்கள் தேவை. கிளிநொச்சி அறிவமுதுக்கு நேரில் வரவும். (6686)

## மின் இணைப்பு வேலைப்பயிற்சி

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் ஏற்பாட்டில் இளைஞர்களுக்கான மின் இணைப்பு வேலைப்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இவ் வீட்டு மின் இணைப்பு வேலைப்பயிற்சிக்கான விண்ணப்பங்கள் தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பணிமனையால் கோரப்பட்டுள்ளன.

இதற்காக விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பம் ஒன்றை எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்குமாறு தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தெல்லிப்பழை பிரதேச செயலகம், காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## நன்றி நவில்கின்றோம்

மக்களின் மனஎழுச்சி உணர்வில் செப்ரெம்பர் 01 இல் கலந்து சர்வதேசத்துக்கு உரிமைப் பிரகடனம் செய்ய தேச உணர்வுடனும் உரிமையுடனும் பங்கு பற்றிய எமது பிரதேச மக்களுக்கு எமது மனம் நிறைந்த நன்றி அறிதலைத் தெரிவிப்பதில் நிறைவடைகின்றோம்

தமிழ்தேசிய
எழுச்சி செயலணிக்குழு,
விசுவமடு பிரதேசம்.

(சி.12641)

## ஏலவிற்பனை

**காலம்:-2005.09.11**

**இடம்:-கிளிநொச்சி மத்தியகல்லூரி முன்பாக உள்ள கட்டட வளாகத்தில்**

பொருள் விபரம்:-

- இலத்திரனியல்
- உந்துருளிகள், ஈருருளிகள்
- அழகுசாதனம்
- புடைவை வகை
- ஊர்தி உதிரிப்பாகங்கள்
- மேலும் பல்வகைப் பொருள்கள்

மேலதிக விபரம் நாளை எதிர் பாருங்கள்

(சி.12692)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| அன்னை மடியில் | | இறைவன் அடியில் |
|---|---|---|
| 19 - 07 - 1978 |  | 19 - 08 - 2004 |


## செல்வன் சுப்பையா தர்மலிங்கம் (தாஸ்)

வானத்தில் ஒளி வீசும் நட்சத்திரங்கள் போல் அண்ணா நீ
எம்மத்தியில் ஒளி வீசிக் கொண்டிருந்த அண்ணா
உன் முகத்தை தேடித் அலைகின்றோம் அண்ணா
இளமைக் காலத்தில் நீ வாழ வேண்டிய எவ்வளவோ இருக்க அண்ணா
உன்னை இரக்கமில்லாத அந்த கயவஞ்சகர் கூட்டம் உயிரைப் பறித்துச் சென்றது ஏனோ அண்ணா
எங்கள் அன்பின் மொத்த உருவமே அண்ணா
நீ எம்மை விட்டுப் பிரிந்து 12 மாதங்களாகி விட்டனவே அண்ணா
எங்களால் இன்னும் நம்ப முடியவில்லை அண்ணா
உன் தங்கை துடிப்பதைப் பாராயோ அண்ணா
அன்புச் செல்வமே எம் இதயங்களையல்லவா சிலுவையில் அறைந்து விட்டு ஒரு நொடிப் பொழுதில் மறைந்து விட்டாய் அண்ணா
உன்னை தம்பி என்று செல்லமாக அழைத்த அண்ணா துடிப்பதைப் பாராயோ அண்ணா
உன்னைப் பெற்ற தாய் கதறுவதைப் பாராயோ அண்ணா
நட்புக்காய் அளவெட்டி சென்றாய் அண்ணா
அலை வெட்டுவாள் என உனக்கு புரியவில்லையே
கடைசி நிமிடத்தில் கெளரியா உனக்கு இயமனாக வந்தாளே அண்ணா
உன் பரந்த மனதிற்காகவா இறைவன் துடிதுடிக்கப் பறித்துக் கொண்டான். அண்ணாவின் உயிர் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிரந்தர முகவரி:-
உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி.
தற்காலிக முகவரி:-
சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

(5388)



# நியூ ஓர்லியன்சில் குவியல் குவியலாக பிணங்கள் மீட்பு

# பலியானோர் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டியது



(வோஷிங்டன்)

**அமெரிக்காவில் 'கற்றினா' சூறாவளியால் பாதிக்கப்பட்ட நியூஓர்லியன்ஸ் நகரில் இறந்தவர்களின் உடல்களை மீட்கும் பணி வேகமாக நடந்து வருகிறது. இறந்தவர்களின் எண்ணிக்கை பல ஆயிரத்தைத்தாண்டும் என அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.**



'கற்றினா' சூறாவளியால் அதிகம் பாதிக்கப்பட்டது நியூ ஓர்லியன்ஸ் நகரமே . சூறாவளி வீசிய ஆறு நாட்களுக்குப் பின்னர் தற்போது தான் மீட்புப் பணி தீவிரமாக நடந்து வருகிறது. அந்த அளவுக்கு நிலைமை மோசமாக உள்ளது.

இது குறித்து அமெரிக்க சுகாதார அமைச்சர் மிசேல் லியாவிட் கூறுகையில்; "பல ஆயிரம் பேர் இறந்திருக்கலாம். நியூ ஓர்லியன்ஸ், லூசியானா, பிலாக்சி, மிசிசிப்பி, அலபாமா எனப் பல பகுதிகளில்கற்றினா சூறாவளியால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆறு நாட்களுக்குப் பின் இப்போது தான் மீட்புப் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இறந்தவர்களின் சரியான எண்ணிக்கை தெரியவில்லை" என்றார்.

உள்துறை அமைச்சர் மிசேல் சேர்டோப் கூறுகையில்; "உடல்களை மீட்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. மோசமான, கோரமான காட்சிகளைக் காண அமெரிக்க மக்கள் தயாராக வேண்டும். நீங்கள் நினைத்துப் பார்க்கக் கூட முடியாத அளவுக்கு ஏராளமானவர்களின் உடல்கள் நியூஓர்லியன்ஸ் நகரில் காணப்படுகின்றன," என்றார்.

நியூஓர்லியன் நகரில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தவர்களை மீட்கும் பணியிலும் மீட்புப் பணியினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை 42ஆயிரம்பேர் மீட்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஆயிரக்கணக்கான வீடுகள் தண்ணீரால் சூழப்பட்டுள்ளன. அங்கு யாராவது தவித்து வருகிறார்களா என மீட்புப் பணியினர் 24 மணி நேரமும் தொடர்ந்து பணியில் ஈடுபட்டுள்ளனர். சிலர் வீட்டை விட்டு வெளியே வர மறுப்பதால் சிக்கல் உருவாவதாக மீட்புக் குழுவினர் தெரிவித்தனர்.

நியூஓர்லியன்ஸ் நகர மேயர் நாகின் கூறுகையில்," மீட்புப் பணி மிகக் கடினமான ஒன்றாக உள்ளது. இப்பணியில் தீயணைப்பு வீரர்கள், பொலிசார் உட்படப் பலர் ஈடுபட்டுள்ளனர். இதில், இரண்டு பேர் கோரத்தைக் காணச் சகிக்காமல் தற்கொலை செய்துகொண்டனர்.

மீட்டுப்பணி எவ்வளவு கடினமானது என்பதை இதன் மூலம் உணரலாம். இங்கு பாதிக்கப்பட்ட பாலம் ஒன்றை பொலிசார் சீர்செய்து கொண்டிருந்தனர். அப்போது ஒரு கும்பல் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது. பொலிசார் திருப்பிச் சுட்டத்தில் நான்கு பேர் பலியானர். நியூ ஓர்லியன்ஸ் நகரில் சூறாவளி வீசியபோது வெள்ளத்தில் சிக்கி ஏராளமானவர்கள் இறந்தனர். மீட்புக்குழு வரும் எனக் காத்திருந்து பலர் இறந்தனர். சிலர் சோகம் தாங்காமல் தற்கொலை செய்து கொண்டனர்." என்றார்.



கற்றினா சூறாவளியால் ஏற்பட்ட வெள்ளத்தில் மூழ்கிய நியூஓர்லியன்ஸ் நகரில் காவல் கடமையில் ஈடுபட்டுள்ள ஆயுதம் ஏந்திய பொலிசார்.

# கற்றினா சூறாவளிக்கு தப்பியவர்கள் கடவுளுக்கு நன்றி கூறிப் பிரார்த்தனை

(ஹூஸ்டன்)

அமெரிக்காவின் நியூஓர்லியன்ஸ் நகரில் 'கற்றினா' சூறாவளியால் ஏற்பட்ட பாதிப்பு பல மாற்றங்களை உருவாக்கியுள்ளது. குறிப்பாக உயிர் தப்பி வந்த மக்கள் கடவுளுக்கு நன்றி சொல்லிப் பிரார்த்தனை செய்தமை உணர்ச்சிபூர்வமாகக்காணப்பட்டதாகத்தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் கடந்த வாரம் வீசிய 'கற்றினா' சூறாவளி மிசிசிபி, லூசியானா, அலபாமா மாகாணங்களில் கடும் பாதிப்பை ஏற்படுத்தியது. நியூஓர்லியன்ஸ் நகரமே அழிந்துபோகும் அளவுக்கு சூறாவளியின் தாக்கம் இருந்தது.

தண்ணீரில் மிதந்த ஆயிரக்கணக்கான உடல்களை மீட்புப் படையினர் கைப்பற்றி வருகின்றனர். இந்த நகரைச் சேர்ந்த ஜோசப் பிராண்ட் என்ற கறுப்பருக்கு சொந்தமாக அலுவலகம் ஒன்று இருந்தது. அது சூறாவளியில் இடிந்து விழுந்துவிட்டது. இவர் கடந்த ஒருவாரமாக மிதக்கும் உடல்களை, குளம்போல் தேங்கியிருந்த அசுத்த நீரை தாண்டி மிக மோசமான பயணத்தை மேற்கொண்டு தப்பி வந்துள்ளார். பாதுகாப்பான இடத்துக்கு வந்தவுடன் அவர் கடவுளுக்குதான் நன்றி கூறினார். அவர் கூறுகையில், "இதற்கு முன் வெள்ளையர்கள் மீது வெறுப்பு இருந்து வந்தது. ஆனால், 'கற்றினா' சூறாவளிக்கு பின் எனது எண்ணத்தை மாற்றிக் கொண்டேன். நான் ஒரு வாகனத்தில் பயணம் செய்தேன். அந்த வாகனத்தை வெள்ளையர்கள் சிலர் ஓட்டி வந்துஎன்னைக் காப்பற்றினர். எனக்கு இருந்த வெறுப்பை அகற்றிய கடவுளுக்கு நன்றி" என்றார்.

அதேநேரத்தில் 'அமெரிக்காவுக்கு கடவுள் தண்டனை கொடுத்துவிட்டார். அவரது கோபமே 'கற்றினா' சூறாவளியாக வந்தது' என அல் - ஹைதா தீவிரவாதிகளின் இணையத் தளங்களில் வெளியிடப்பட்டுள்ளது.

விளையாட்டு மைதானத்தில் தங்க வைக்கப்பட்டிருக்கும் 16 ஆயிரம் மக்களும் மத ரீதியான உணர்ச்சியுடனே காணப்படுகின்றனர். ரோஸ் மெக்நிலே என்பவர் கூறுகையில், "எனக்கும் நியூஓர்லியன்ஸ் நகருக்கும் ஒத்துப் போகவில்லை. அங்கு நடந்த சண்டையில் என் இரண்டு மகன்களையும் இழந்துவிட்டேன். நான் அங்கிருந்து செல்ல வேண்டும் என்பதற்காகவே இந்த சோதனையை கடவுள் கொடுத்துள்ளார்" என்றார்.

மைதானத்தில் தங்கியுள்ள பலர் பிரார்த்தனை செய்து பாடல்கள் பாடியபடி சுற்றிச் சுற்றி வந்து தங்களைக் காப்பாற்றிய கடவுளுக்கு நன்றி கூறுவது உணர்ச்சிபூர்வமாக இருந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# தாய்வானில் நிலநடுக்கம்

(தைபே)

தாய்வான் தலைநகர் தைபேயில் நேற்றுக் காலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிச்டர் அளவில் 6.1 அலகாக பதிவான இந்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் அதிர்ந்தன. இதனால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறினர்.

# கலை அரங்கில் திடீர் தீவிபத்து எகிப்தில் 40 பேர் உடல் கருகிப் பலி

எகிப்தில் கலையரங்கு ஒன்றில் திடீரென ஏற்பட்ட தீயில் 40 பேர் உடல்கருகி உயிரிழந்துள்ளனர். எகிப்தில் நைல்நதி கரையோரத்தில் உள்ள கலை அரங்கில் கலைநிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்தன. நடனம், இசைக் குழுவினர் பலர் மரத்தால் அமைக்கப்பட்ட மேடையில் நின்று கலை நிகழ்ச்சி நடத்திக்கொண்டிருந்தனர். அப்போது அந்த அரங்கில் திடீரென்று தீ பிடித்தது.

இதில் அரங்கினுள் இருந்த ரசிகர்கள், கலைஞர்கள் உட்பட 40 பேர் உடல் கருகிப் பலியானார்கள் 70 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். எரியும் மெழுகுவர்த்தி சரிந்து விழுந்து மேடையில் போடப்பட்டிருந்த திரையில் விழுந்ததால் இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.



ஈராக்கில் புதிய அரசாங்கத்தால் எரிபொருள் பாவனை மற்றும் போக்குவரத்து கட்டுப்பாடுக்குள் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் பாக்தாத்தில் சாரதி ஒருவரைச் சோதனையிடும் பொலிசார்.

# நிவாரணப் பணிகளை சரிவரக் கவனிக்கவில்லை ஜோர்ஜ்புஷ் மீது பிராஸ்னன் குற்றச்சாட்டு

(புளோரிடா)

அமெரிக்காவின் புளோரிடா லூசியானா, மிசிசிப்பி, அலபாமா ஆகிய மாகாணங்களில் சமீபத்தில் வீசிய கற்றினா சூறாவளி பேரழிவை ஏற்படுத்தியதுடன் ஆயிரக்கணக்கானவர்களின் உயிரைப் பறித்து விட்டது. வரலாறு காணாத இந்த சூறாவளிக்கு பத்து இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் வீடுவாசல்களை இழந்து அநாதைகளாக தவிக்கிறார்கள்.

மீட்பு நிவாரணப் பணிகள் சரியாக நடக்கவில்லை என்று அதிபர் புஷ் மீது அமெரிக்க மக்கள் குறை கூறிவருகிறார்கள். இப்போது ஜேம்ஸ்பாண்ட் நடிகர் பீர்ஜ் பிராஸ்னனும் ஜோர்ஜ்புஷ் மீது புகார் கூறியிருக்கிறார். இது குறித்து பிராஸ்னன் கூறும் போது, "சுற்றுச்சூழல் பாதுகாப்புக் கொள்கையில் ஜோர்ஜ்புஷ் அக்கறை காட்டவில்லை. புயல் நிவாரணப் பணிகளை திறம்படக் கையாளத் தெரியவில்லை. ஜோர்ஜ் புஷ்சின் நடவடிக்கைகள் வெட்கக்கேடாக இருக்கிறது" என்று கூறியுள்ளார்.

# உள்துறை அமைச்சகத்தின்மீது தாக்குதல் ஈராக்கில் இரண்டு பொலிசார் உட்பட ஐவர் பலி

(பாக்தாத்)

ஈராக்கில் நேற்று முன்தினம் அதிகாலையில் தீவிரவாதிகள் ஈராக் உள்துறை அமைச்சகத்தின் மீது நடத்திய தாக்குதலில் இரண்டு பொலிசார் பலியாயினர் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் ரொக்கெட்குண்டுகள், சிறு பீரங்கிகள், தானியங்கித் துப்பாக்கிகள் உள்ளிட்ட நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தித் தாக்கினர். இந்த தாக்குதல் இந்திய நேரப்படி காலை 7.45 மணிக்கு நடந்தது. இதையடுத்து அமெரிக்க இராணுவ உலங்குவானூர்திகள் நகரெங்கும் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஜப்பானில் சூறாவளி 14பேரைக் காணவில்லை

(டோக்கியோ)

தெற்கு ஜப்பானில் நேற்று அடித்த கடுமையான சூறாவளிக்கு ஒருவர் பலியானார். 14 பேரைக்காணவில்லை. ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். இதையடுத்து ஜப்பான் அரசு போர்க்கால நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.



*அவுஸ்திரியாவில் உலங்குவானூர்தியில் எடுத்துச்செல்லப்பட்ட பெரிய டிரம் தவறி விழுந்ததில், ஒரு கேபிள் கார் விபத்திற்குள்ளானது. இதில் பயணம் செய்த ஒன்பது பேர் பலியாயினர். காயமடைந்தவர்களை மற்றொரு உலங்கு வானூர்தி மீட்கிறது.*

# முல்லை. மாவட்ட எழுச்சி மாநாட்டை பேரெழுச்சியுடன் நடத்த மக்கள் தயார்

வவுனியாப் பிரகடனத்திற்கு வலுச் சேர்க்கும் முல்லை.மாவட்ட எழுச்சி மாநாட்டுக்கு இப்போதே மக்கள் தயாராகி விட்டனர்.

வரலாறு காணாத மக்கள் வெள்ளம் பேரெழுச்சி கொண்டு, வரும் புதன் 14 ஆம் நாள் தமது சுய நிர்ணயம் குறித்த கோரிக்கையை சர்வதேசத்தின் கவனத்திற்கு ஈர்க்கவுள்ளன.

இந்த எழுச்சி நாளுக்கான தயார்படுத்தலில் ஈடுபட்டு வரும் செயலணியின் ஊடக இணைப்பாளர் வேதவனத்திடம் இது குறித்து கேட்ட போது, இவ் எழுச்சி நாள் பற்றி அவர் குறிப்பிடுகையில்:-

வவுனியா பிரகடனத்திற்கு வலுச் சேர்க்கும் முல்லை மாவட்ட எழுச்சி நாள் மிக எழுச்சிகரமாக மக்களுடைய உணர்வை தட்டக் கூடியவாறு மக்களது எழுச்சியின் உச்சக் கட்டத்தை காட்ட வேண்டுமென்பதற்காக நாங்கள் பல வேலைத் திட்டங்களை வகுத்து செயற்படுத்திக் கொண்டு வருகின்றோம். அதற்குரிய மாவட்ட செயலணிக்குழு ஒன்று அமைக்கப் பெற்றிருக்கின்றது. இதனுடைய தலைவராக கரைதுறைப் பற்று பிரதேச சபையின் விசேட ஆணையாளர் கிருஷ்ணபிள்ளை செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். உப தலைவராக முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம் அவர்களும் செயலாளராக வேணாவில் ஸ்ரீமுருகானந்தா வித்தியாலய முதல்வர் இ. செல்வநாயகமும், பொருளாளராக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ. தயானந்தாவும் இவர்களோடு முல்லை மாவட்டத்திலே இருக்கின்ற நான்கு பிரதேச செயலாளர்களும் அங்கத்தவர்களாக இருக்கின்றார்கள் ஒவ்வொரு திணைக்களத் தலைவர்களும் இதிலே அங்கத்துவம் பெறுகிறார்கள். துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளரும் இக் குழுவில் அங்கம் வகிக்கின்றார். இவர்கள் அனைவரையும் இணைத்து ஒழுங்குபடுத்தப்பட்ட குழுவாக மாவட்ட செயலணிக்குழு இயங்கிக் கொண்டிருக்கின்றது. இதனுடைய பணிமனை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பண்பாட்டு மண்டபத்தில் இயங்கி வருகின்றது. இங்கிருந்து எமது செயற்பாடுகள் மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. உடனுக்குடன் பிரதேசங்களிலிருந்து வரும் தகவல்களை சேகரிக்கவும், எம்மிடமிருந்து எழுச்சி நாள் சம்பந்தமான தகவல்கள் பிரதேசங்களை சென்றடையக் கூடியவாறும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

> **எதிர்வரும் 14 ஆம் நாள் புதுக்குடியிருப்பில் நடைபெறவுள்ள மக்கள் எழுச்சி நிகழ்வு குறித்து முல்லை மாவட்டசெயலணிக் குழுவின் ஊடக இணைப்பாளர் வேதவனத்துடனான செவ்வி**

இந்தச் செயற்குழு பிரதேச மட்டத்திலே பிரதேச செயலாளர்களுடைய தலைமையிலே பொது அமைப்புக்களையும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுடைய தலைவர்களையும் ஒன்று சேர்த்து அதனுடைய ஆரம்பக் கட்ட பிரதேச மட்டங்களை கூட்டியிருக்கின்றோம். அதிலே பிரதேச மட்ட செயலணிகள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது அச் செயலணிகளுக்கு பிரதேச செயலாளர்கள் தலைமை தாங்குகின்றனர். மொத்தமாக முல்லை மாவட்டத்திலே ஒன்பது பிரதேசங்கள் இருக்கின்றன. இச் செயற்பாட்டுக்காக இப் பிரதேசங்கள் பிரிக்கப்பட்டு அங்கும் செயலணிகள் இயங்கி வருகின்றன. அச் செயலணிகளில் பதினைந்திற்கு மேற்பட்டவர்கள் அங்கம்வகித்து செயற்பாடுகளை விரைவுபடுத்தி வருகின்றனர்.

இதே போன்று கிராம ரீதியாகவும் செயலணிகள் அமைக்கப்பெற்று கிராம சேவையாளர்களின் இணைப்புச் செயற்பாட்டோடு இயங்கி வருகின்றது. அத்தோடு கிராம மட்டத்தில் உள்ள பொது அமைப்புக்களும் இவ் வெழுச்சிச் செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றன. கிராம அபிவிருத்திச் சங்கம், கமக்கார அமைப்பு, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விளையாட்டுக்கழகங்கள் சன சமூக நிலையங்கள் கோவில் நிர்வாகங்கள் ஆகிய அமைப்புக்கள் அந்தந்த கிராம மக்களின் நிலைப்பாட்டுக்கு ஏற்றவாறு ஒழுங்குபடுத்தி வருகிறார்கள். இவர்கள் தாங்களாகவே முன் வந்து ஏனைய மக்களுக்கு கருத்தூட்டல்களை செய்து மக்களைத் தாமே அணி திரட்ட வேண்டும் என்ற முழு நோக்கோடு செயற்பட்டு வருகின்றார்கள். சர்வதேசத்திற்கு எமது இந்த விழிப்பைக் காட்ட வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பகுதியிலும் இப்போது மக்கள் எழுச்சியாகச் செயற்பட்டு வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. அத்தோடு அரச, அரச சார்பற்ற அமைப்புக்கள் விழிப்புணர்வுக் கருத்துக்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை மக்களுக்கு விநியோகித்து வருகிறார்கள்.

மேலும் பாரம்பரிய கலை வடிவங்களை இரவு வேளைகளில் நிகழ்த்தி அதனூடாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்கள் எழுச்சி கொள்ளக் கூடிய வகையில் செயற்பட்டு வருகின்றார்கள்.

இது பற்றி மக்களின் கருத்துக்களை நாம் கேட்டறிந்த போது, தமக்கு இது உண்மையிலேயே ஒரு எழுச்சியாக இருக்கின்றது. எப்பொழுது அந்த 14 ஆம் திகதி வரும், எங்களுடைய முல்லை. மாவட்ட ஒட்டு மொத்தக் குரலை உலகெங்கும் ஒலிக்கச் செய்யும் சந்தர்ப்பத்தை எதிர் பார்த்திருக்கின்றோம் என கூறியதையும் நாங்கள் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ் வெழுச்சி நாளுக்கு தூர இடங்களில் இருந்து மக்களை அழைத்து வருவதற்கு போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. ஆனாலும், மக்கள் கூறுகிறார்கள். தங்களுடைய உழவு இயந்திரங்களின் மூலம் வருவோம் என ஒருசாராரும், உந்துருளி அணியாக வருவோமென மற்றொரு சாராரும், ஈருருளி பேரணியாக வருவோம் என்றும் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் அனைவரும் அணி சேர்ந்து கொடிகளைத் தாங்கிய வாறு கோசமிட்டுக் கொண்டு வருவோம் என்கின்ற பலவாறான எண்ணக் கருத்துக்களை எமக்கு வெளிப்படுத்தி வருகிறார்கள்.

இவ் எழுச்சி நாளுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் 22 பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள். மலையக மக்கள் முன்னணித்தலைவர் சந்திரசேகரம், மேல் மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். பல பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொள்கின்றனர்.

யாழ். மாவட்ட கல்வி மான்கள் அனைவரும் இங்கு வருகை தரவுள்ளனர்.

இம் மாதம் 14 ஆம் திகதி 3.00 மணிக்கு புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டு மைதானத்திலே மிக எழுச்சிகரமாக நடைபெறும். இதுவரை பல வரலாறுகளைப் படைத்த இந்த முல்லை.மாவட்டம், எதிர் வரும் 14 ஆம் திகதி மிகப் பெரும் எண்ணிக்கையான மக்கள் எழுச்சி கொண்டு வவுனியா பிரகடனத்திற்கு வலுச் சேர்க்கும் எழுச்சி கொண்ட வரலாற்றையும் சர்வதேசத்திடம் எமது சுயநிர்பண உரிமையை அங்கீகரிக்கக் கோருவோம் என்றார்.

**செவ்விகண்டவர்கள்**
**சசி.தீபன்**

## சான்றிதழ் வழங்கலும் பயிற்சி நிலையத் திறப்பு விழாவும்





பட -கவியரசன்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் புதிதாக தையல் பயிற்சியினை மேற்கொள்வோருக்கான தையல் பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டதுடன் கணினி பயிற்சியினை முடித்த 32 மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நடை பெற்றது பொருண்மிய மதியுரையக முல்லை மாவட்ட செயலகத்தில் கடந்த சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் பொருண்மிய மதியுரையக முல்லை. மாவட்ட இணைப்பாளர் வை. விமலேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச் சுடரினை ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் செல்வி சுபாசினி கந்தையா, ஒட்டுசுட்டான் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் ஆனந்தன் ஆகியோர் ஏற்ற தேசியக் கொடியினை முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன் ஏற்றியதைத் தொடர்ந்து ஜப்பான் பொருண்மிய மதியுரையகத்தின் நிதியுதவியுடன் ஒட்டுசுட்டானில் நிறுவப்பட்ட தையல் பயிற்சி நிலையத்தை இலண்டன் பொருண்மிய மதியுரையகத் தலைவர் வசந்தன் நாடாவினை வெட்டித் திறந்து வைத்ததைத் தொடர்ந்து இலண்டன் பொருண்மிய மதியுரையகத்தின் செயலாளர் குணபாலசிங்கம் தையல் பயிற்சியினை ஆரம்பித்து வைத்தார்.

சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் மங்கல விளக்கினை பொருண்மிய மதியுரையகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சி. சுகுணன், ஒட்டுசுட்டான் இ.த.க பாடசாலை அதிபர் வேலாயுதம்பிள்ளை, முல்லை. அகதிகள் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் தெ. சஞ்சீவன், கனடா பொருண்மிய மதியுரையகத்தைச் சேர்ந்த வில்லியம், கணினிப் பயிற்சி ஆசிரியர் சக்திதாஸ், முன்பள்ளி முதன்மை ஆசிரியர், மாணவன் கோடீஸ்வரன் ஆகியோர் ஏற்றியதைத் தொடர்ந்து கருத்துரைகளை முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன், இ.த.க பாடசாலைஅதிபர் சி. வேலாயுதம்பிள்ளை, உதவி அரச அதிபர் செல்வி சுபாசினி கந்தையா இலண்டன் பொருண்மிய மதியுரையகத் தலைவர் வசந்தன் ஆகியோர் வழங்கினார்.

முல்லை. மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் உரையாற்றுகையில்; ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கணினிப் பயிற்சி, தையல் பயிற்சி மட்டு மல்லாமல் எமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பத் தக்க பயிற்சி நிலையங்களை பொருண்மிய மதியுரையகம் அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் செல்வி சுபாசினி கந்தையா உரையாற்றுகையில்; இப் பிரதேசத்தில் அதிகம் வறிய மாணவர்களே உள்ளனர். இதனால் இங்குள்ள சில மாணவர்கள் பல சிரமங்களின் மத்தியில் புதுக்குடியிருப்பு சென்றுதான் கற்றனர். இதனை கருத்திற் கொண்டு பொருண்மிய மதியுரையகம் மேற்கொண்ட முயற்சியால் பல சந்தர்ப்பங்களை இழந்த மாணவர்களும் கணினி கற்க வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது பாராட்டத்தக்க விடயமாகும்.

இதனைத் தொடர்ந்து அமெரிக்க பொருண்மிய மதியுரையக நிதியுதவியுடன் ஏழு பயனாளிகளுக்கு கடனடிப்படையில் சூரிய மின்கலம் வழங்கப்பட்டது. (05)

## த.ச.பொ.அபிவிருத்தி நிறுவனத்தால் செஞ்சோலை சிறுவர்கள் 12 பேருக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் தேட்ட வைப்பு

தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தினரால் செஞ்சோலை இல்லச் சிறுவர்கள் 12 பேருக்கு ரூபா 10,000 வீதம் தமிழீழ வைப்பகத்தில் அமுதம் தேட்ட வைப்புச் செய்து அவர்களுக்கான கணக்குப் பதிவுப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. புத்தகத்தினை நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வழங்கினார்.

கடந்த சனிக்கிழமை மதியம் 2.00 மணியளவில் நிறுவனத்தின் அலுவலகத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் செஞ்சோலைச் சிறுவர்களும் பராமரிப்பாளர்களும், தமிழர் சமூகப் பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் நிர்வாகத்தினர் கலந்து கொண்டனர். இப் பிள்ளைகளுக்கு வைப்புச் செய்வதற்கான நிதியினை தமிழர் சமூகபொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தினடம் புலம் பெயர்ந்து நெதர்லாந்தில் வாழும் தமிழீழ அன்பர் தேவதுரைசண்முகதாஸ் அவர்கள் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முசலி மத்திய மகாவித்தியாலயத்தில் 30 ஆம் திகதி தேசிய மீலாத் விழா

(மன்னார்)

மன்னாரில் எதிர்வரும் 30ஆம் திகதி முசலி மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் முஸ்லீம்களுக்கான தேசிய மீலாத் விழா நடைபெறவுள்ளது.

இதற்கென வன்னி புனர்வாழ்வு அமைச்சர் ரிசாட் பதியுதீன் 3.5 மில்லியன் ரூபாவை இவ் விழாவிற்கென ஒதுக்கீடு செய்துள்ளார். இதற்கான சகல ஏற்பாடுகளையும் அமைச்சரின் செயலாளர் மேற்கொண்டு வருகின்றார். (18)







## 29– 08– 2005
## 04– 09– 2005




**29**

□ பாடசாலைகளுக்கு அருகில் படையினர் காவலரண்களை அமைத்து காவலில் ஈடுபட்டுள்ளதை ஆட்சேபித்து படையினரை விலக்குமாறு கோரி திருகோணமலை நகரில் மாணவர்கள் ஒருநாள் பகிஷ்கரிப்பினை மேற்கொண்டனர்.

□ கொழும்பிலுள்ள சுடரொளி ஊடக அலுவலகம் மீது கைக்குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதன்போது பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த ஊழியர் ஒருவர் பலி, மூவர் காயம்.

□ தமிழீழ கடற்படையின் துணைப் படையின் நூறுபேரைக்கொண்ட அணி முழுமையான இராணுவப் பயிற்சியினை முடித்து வெளியேறியது.



**30**

□ மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பிரதேசத்திலுள்ள கிரிமிச்சை சந்தியில் விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த இராணுவத்தினருடன் சேர்ந்தியங்கும் குழுவினர் தாக்குதல் நடத்தியதில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்த துடன், மேலும் ஒரு போராளியும், பொதுமக்கள் இருவரும் காயமடைந்தனர்.

□திருமலை மூதூர்ப் பகுதி மக்களில் ஒரு தொகுதியினர் கிராமியப்படை பயிற்சியினை முடித்து வெளியேறியுள்ளனர்.

□சுடரொளி ஊடகவியலாளர்கள் இருவர் கொழும்பில் வைத்து நான்கு பேர் கொண்ட குழுவினரால் தாக்கப்பட்டனர்.

□ கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் உந்துருளியில் வந்த இருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் பலி.

□ கொழும்பு தெகிவளை பொலிஸ் பிரிவுக்குள் சிறிலங்காப் பொலிசாரும், இராணுவத்தினரும் கூட்டாக நடத்திய தேடுதல் நடவடிக்கைகளில் அப்பாவித்தமிழர்கள் 28 பேர் கைது.

□ ஆற்றில் மூழ்கி போராளியொருவர் சாவடைந்தார்.

**31**

□ மன்னார் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும், மன்னார் மாவட்ட அரசியல் துறையினருக்கு மிடையிலான சந்திப் பொன்று மன்னார் போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் பணிமனையில் இடம்பெற்றது.

□ மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற கைக்குண்டுத்தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்களில் சிறிலங்கா இராணுவச் சிப்பாய்கள் நான்கு பேரும், பொலிசார் ஒருவரும் காயம்.

□ முன்னாள் சனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் கொலையில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்பட்டு வழக்கு தொடரப்பட்டிருந்த 21 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

□பொலிசாரும் இராணுவத்தினரும் வயோதிபர் ஒருவரிடம் வாகனம் ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரத்தைக் கேட்டு கடுமையாக நடந்து கொண்டமையினால் குறித்த வயோதிபர் ஸ்தலத்தில் வீழ்ந்து மரணம் இச்சம்பவம் யாழ்.பலாலி வீதிச்சந்தியில் இடம்பெற்றது.

**01**

□ தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைச் சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும் எனக்கோரி வவுனியா தமிழ்தேசிய எழுச்சி மாநாட்டு பிரகடனத்தை வலியுறுத்தி கிளிநொச்சியில் மாபெரும் தமிழ்தேசிய எழுச்சி மாநாடு பல்லாயிரக்கணக்கான மக்களின் பங்களிப்புடன் இடம்பெற்றது.



□ தமிழ் ஊடகவியலாளர்கள் மீதும் ஊடகங்கள் மீதும் அதிகரித்து வரும் வன்முறைகளைக் கண்டித்து யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

□ மட்டக்களப்பு சந்திவெளிப் பிரதேசத்தில் காலைமுதல் நண்பகல் வரை இராணு வத்தினரால் பாரிய சுற்றிவளைப்பு தேடுதலொன்று நடத்தப்பட்டது.

□ இலங்கையின் 15ஆவது கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் வசந்த கரண்ணகொட பதவியேற்பு.

**02**

□ மட்டக்களப்பு செங்கலடி பதுளைவீதி கொடுவாமடு சிறிலங்கா இராணுவ முன்னணி காவல் நிலைய சோதனைச் சாவடியில் வைத்து தமிழர் ஒருவர் படையினரால் கைது.

□ திருமலை மாவட்டம் உப்பு வெளி பகுதியில் வைத்து சிங்களவர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் வெட்டிக்கொலை

□கம்பஹா மாவட்டம் வென்னப்புவவில் தேசவிரோதி கருணா குழுவைச் சேர்ந்தவர் என நம்பப்படும் ஒருவர் உந்துருளியில் வந்த இருவரால் சுட்டுக்கொலை.

□ வடமராட்சியின் காங்கேசன் துறையை அண்டிய மயிலியதனை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் இருவர் சிறிலங்கா படையினரால் பிடிக்கப்பட்டு கண்மூடித்தமாக தாக்கப்பட்டனர். படகும் சேதமாக்கப்பட்டது.

□ எழுது மட்டுவாள் சிறிலங்கா இராணுவ முகாமில் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் சக சிப்பாய் ஒருவரால் சுட்டுக்கொலை.

**03**

□ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து படையினரின் கட்டுப்பாட்டு பகுதிக்குச் செல்லும் நுழைவாயில்களில் உள்ள இராணுவக் காவலரண்களில் நிரந்தரமான கண்காணிப்பாளரை நிறுத்த வேண்டுமென போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினருடன் கொக்கட்டிச்சோலை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற அவசர சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் வேண்டுகோள் விடுத்தார்.



□முகமாலை சோதனைச் சாவடியில் வைத்து விடுதலைப்புலிப் போராளிகள் இருவர் படையினரால் கைது செய்யப்பட்டு பின் விடுதலை.

**04**

□ மட்டக்களப்பு வாழைச்சேனை வீதியில் சிறிலங்கா இராணுவ வாகனங்கள் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இரு படையினர் படுகாயம்.

□ விடுதலைப்புலிகளின் களுவாஞ்சிக்குடி அரசியல் துறைப் பணிமனை மீது சிறிலங்காப் படையினரின் உதவியுடன் தேசவிரோதிகளினால் கைக்குண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கித் தாக்குதல் நடத்தப்பட்டது இதில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார். அலுவலகம் தீ வைத்து எரிக்கப்பட்டது.




□ லெப்.கேணல் மறவன் நினைவாக உருவாக்கப்பட்ட தமிழீழ கடற்படையின் துணைப் படையின் இரண்டாவது அணியினருக்கான பயிற்சி நிறைவு விழா வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது

□ போராளிக் கலைஞர் புகழினியின் பரத நிருத்திய நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் நிதர்சனம் மகளிர் போராளிகளின் தயாரிப்பில் உருவான "ஈரத்தீ முழு நீளத்திரைப் படத்தை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் வெளியிட்டு வைக்க தேசியத் தலைவர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

# சிலாபம் பகுதியில் கடல்நீர் குடியிருப்புக்குள் புகுந்தது

சிலாபம் பகுதியில் நேற்று முன் தினம் மாலை கடல் நீர் திடீரென குடியிருப்பு பகுதிக்குள் உட்புகுந்துள்ளது. இதனால் இரண்டு வீடுகள் நீரில் மூழ்கியதுடன் பல தென்னை மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. சிலாபம் மாரவில கட்டுநேரிய பகுதியிலேயே கடல் நீர் குடியிருப்பு பகுதிக்குள் உட்புகுந்துள்ளது.

இதனால் அப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு பெரும் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது. அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் இரவோடு இரவாக பாதுகாப்பான இடங்களுக்கு சென்று விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடலலை உட்புகுந்த வேளை பலத்த காற்றும் வீசியுள்ளது. இதனால், அப்பகுதியில் உள்ள மின்கம்பங்கள், தொலைத் தொடர்பு தூண்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. இதனால், அங்கு தொலைத் தொடர்பு முற்றாகத் தடைப்பட்டிருந்தது.

இந்த மோசமான காலநிலை பற்றி வானிலை அவதான நிலையத்தின் அதிகாரி அஜித் வீரவர்தன கருத்து தெரிவிக்கையில்;

இலங்கையை நோக்கி வீசுகின்ற காற்று மணித்தியாலத்திற்கு 45 முதல் 55 கிலோமீற்றர் வேகத்தில் வீசும். இக்காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 75 கிலோமீற்றர் வேகத்தில் வீசுமாயின் கடலலை வழமையை விட மேலெழுந்து குடியிருப்புக்களை நோக்கி உட்புகும் சாத்தியக்கூறுகள் தென்படுகிறது என்றார்.

இதே வேளை, கொழும்பு உட்பட நாடளாவிய ரீதியில் தற்பொழுது நிலவுகின்ற மோசமான கால நிலை இன்னும் 18 நாட்களுக்கு நீடிக்கும் சாத்தியக்கூறுகளும் இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## அரச சொத்துக்களை தேர்தலில் பயன்படுத்துவதைக் கண்காணிக்க முடிவு

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தலில் அரச சொத்துக்கள் முறையற்ற வகையில் பயன்படுத்தப்படுகின்றனவா? என்பதைக் கண்காணிக்க இலஞ்ச ஊழல் ஆணைக்குழு ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் அமைப்புடன் இணைந்து கூட்டு நடவடிக்கையொன்றை செயற்படுத்தத் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பிலான திட்டங்கள் பற்றி ஆராய்வதற்காக எதிர்வரும் ஆறாம் திகதி ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் அமைப்புடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாக இலஞ்ச ஊழல் திணைக்களத் தலைவர் அமீர் இஸ்மாயில் தெரிவித்தார்.

தேர்தலின்போது அரசியல் கட்சிகளின் தேவைகளுக்காக அரச சொத்துக்களைப் பயன்படுத்துவது ஊழல் வகையைச் சேர்ந்த குற்றமாகக் கருதப்படுவதால் அது குறித்து ஆராய்வது இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் கடமையாகும்.

## மாவட்ட அலுவலகங்களுக்கு வாக்காளர் அட்டைகள் அனுப்பி வைப்பு

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் சனா பதித் தேர்தலுக்கான வாக்காளர் டைகள் யாவும் அச்சடிக்கப்பட்டு இலங்கையின் சகல மாவட்டங்க க்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதென தேர்தல் ஆணையாளர் திணைக்களம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு ஏ-9 வழி ஊடாக வாக்காளர் அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது மாவட்டங்களில் உள்ள தேர்தல் காரியாலயங்களில் வாக்காளர்களின் பெயர்கள் எழுதும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

மேலும், மாவட்டங்களில் கடமை புரியும் பிரதி ஆணை யாளர்கள் அனைவரையும் 2004 ஆண்டு தேர்தல் வாக்காளர் பதிவேடுகளையும் எடுத்துக் கொண்டு கொழும்பு தேர்தல் ஆணையாளர் திணைக்களத்திற்கு சமுகமளிக்குமாறு தேர்தல் ஆணையாளர் க் கொண்டுள்ளார்.

# யுத்தத்தை மட்டுமே தெரிவாக்கியுள்ள ஜே.வி.பி–ராஜபக்ஷ கூட்டு

**சிறிலங்கா** அரசியலில் என்றும், எப்பொழுதும் புதுமையானதொன்றும் நடந்துவிடுவதில்லை. இதற்கு எடுத்துக்காட்டாக இறுதியில் வெளிவந்துள்ள தகவலானது 12 நிபந்தனைகளுடன் ஜே.வி.பி பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு சனாதிபதித்தேர்தலில் வழங்க முன்வந்துள்ள ஆதரவாகும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவை ஜே.வி.பி ஆதரிக்கும் என்பது அரசியல் சற்றுப் புரிந்தவர்களுக்கும் தெரிந்ததொன்றே. ஏனெனில் இவ் ஆதரவு எவ்வாறு மகிந்த ராஜபக்ஷ குறிப்பிடத்தக்கதொரு வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்கு உதவக்கூடியதோ அதே போன்று ஜே.வி.பி யின் எதிர்கால அரசியல் வாழ்விற்கும் அவசியமானதுமாகும்.



ஜே.வி.பி 33 பாராளுமன்ற ஆசனங்களைக் கொண்டிருப்பதனால், அது பலம் பொருந்திய மூன்றாவது சக்தி என்ற எண்ணப்பாடு வெளிப்படுத்தப்படுவதாக இருக்கலாம். ஆனால் ஜே.வி.பி. பொதுத் தேர்தல் ஒன்றை தனித்து எதிர்கொள்ளுமானால் இப்பாராளுமன்ற ஆசனங்களில் அரைவாசியைத்தானும் பெற்றுக் கொள்ளுமா? சனாதிபதித்தேர்தலில் போட்டியிட்டால் பத்து சதவீத வாக்குகளைத் தானும் பெற்றுக்கொள்ளுமா? என்பது கேள்விக்குரியதே. இது ஜே.வி.பி க்கும் விளங்காததொன்றல்ல.

அதிலும் குறிப்பாகப் பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து அரசாங்கத்தில் இருந்து வெளியேறிய பின்னர் சிறுபான்மையாகி விட்ட அரசாங்கத்தைக் கூட எதையுமே செய்யமுடியாது போய்விட்டதை ஜே.வி.பி நன்கே உணர்ந்துகொண்டது. அதாவது அரசாங்கத்தை எந்த விடயத்திலும் ஜே.வி.பி.யால் அச்சுறுத்த முடியாமல் போய் விட்டது. அதுவும் ஜே.வி.பியால் புரியப்பட்டே உள்ளது.

இதேசமயம், அடுத்த சனாதிபதித் தேர்தலில் ஐ.தே. கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக ஆருடங்கள் வெளியாகிக் கொண்டிருக்கையில் தனித்துப் போட்டியிடுவதோ, சிறிலங்கா சுதந்திரக்கட்சியை விட்டு விலகி நிற்பதோ ஐ.தே.கட்சியின், வெற்றிக்கு தாமே வழி அமைப்பதாகிவிடும் என்பதும் ஜே.வி.பி யினருக்கு நன்கே தெரியும்.


ஆகையினால்தான் ஜே.வி.பி யினர் சனாதிபதித்தேர்தலில் தனித்துப் போட்டியிடப் போவதாக உரத்த குரலில் கூடப் பேசிக் கொள்ளவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பி யுடனான உறவு குறித்து அறிவிப்பு எதனையும் வெளியிட முன்னரே மகிந்த ராஜபக்ஷவை நிபந்தனையுடன் ஆதரிப்பதற்கு முடிவு செய்துள்ளதாக ஜே.வி.பி யின் தலைவர் அறிவிப்புச் செய்துள்ளார்.

ஜே.வி.பி யின் இந்நிலையானது ஒரு வகையில் "விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை" என்பது போன்றதாகும். இதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் சனாதிபதித்தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவிற்குப் போட்டியொன்றைக் கொடுக்க ஜே.வி.பி யின் உதவி அவசியமானதாகும். ஆகையினால், ஜே.வி.பி யின் அருவருக்கத்தக்க பேச்சுக்களையும் ஏற்று, மான அவமானங்களை மறந்து கூட்டணி ஒன்றிற்குச் செல்ல வேண்டியதொரு நிலையில் சுதந்திரக் கட்சியும் உள்ளது.

ஜே.வி.பி - மகிந்தராஜபக்ஷ தேர்தல் கூட்டு எவ்வாறு எதிர்பார்க்கப்பட்டதோ அதே போன்று ஜே.வி.பி யின் நிபந்தனைகளும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கும், அப்போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தும் விடுதலைப் புலிகளுக்கும் எதிரானதாக இருக்கும் என்பதும் எதிர்பார்க்கப்பட்டதொன்றே.

ஜே.வி.பி யின் 12 நிபந்தனைகளில் பெரும்பாலானவை தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கும், அவர்களின் கோரிக்கைகளிற்கும் எதிரானவை. இதே சமயம், மற்றைய கோரிக்கைகள் இலங்கையின் தற்போதைய பொருளாதார ஒழுங்கிற்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் எதிரானவை அன்றி மாறானவை.

இந்தவகையில் ஜே.வி.பி முன்வைத்துள்ள நிபந்தனைகளில் முதல் ஆறு நிபந்தனைகளும், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் மேற்கொள்ளப்படும் சகல முயற்சிகளுக்கும் எதிரானவை.குறிப்பாகச் சுட்டிக்காட்டுவதானால், சுனாமி அனர்த்த பொதுக்கட்டமைப்பு, இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை, சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வு, அமுலிலுள்ள யுத்தநிறுத்த உடன்பாடு, நோர்வேயின் பங்களிப்பு என்பவற்றிற்கு எதிரானவையாகும்.



அடுத்ததாக, நான்கு விடயங்கள், சிறிலங்காவின் தற்போதைய பொருளாதார ஒழுங்கிற்கு- அதாவது திறந்த பொருளாதார ஒழுங்கிற்கு-குறிப்பாகத் தனியார் மயமாக்கலுக்கு எதிரானது. இந்தவகையில், அரச கூட்டுத்தாபனங்களைத் தனியார் மயமாக்கலில் இருந்து காஸ் விலை தனியார் மயமாக்கலுக்கு எதிரான கோரிக்கைகள் அடங்குகின்றன. ஏனைய விதிகளில் ஒரு விதி, சனாதிபதி ஆட்சி முறையை ஒழித்தல். இன்னொரு விதி சிறிலங்காவின் வெளியுறவுக் கொள்கையானது அணி சேரா கொள்கையாக இருத்தல் வேண்டும் எனக் கூறுகின்றது.

ஒட்டு மொத்தத்தில் ஜே.வி.பியின் இந் நிபந்தனைகள் இலங்கையின் தற்போதைய அரசியலில் யதார்த்தத்தினை சூழலினை முற்றிலுமாக மறுதலிப்பதாக, மாற்றியமைக்க வேண்டும் என்பதாக உள்ளது. அத்தோடு நடைமுறையில் சாத்தியமற்றதாகவும், இலங்கையின் அரசியல் பொருளாதாரத்தின் எதிர்காலத்தைக் கேள்விக்குள்ளாக்குவதாக்கியுள்ளது.

வேறொரு விதத்தில் கூறுவதானால்; கடந்த நூற்றாண்டின் மத்திய காலப் பகுதிக்கு - அதாவது, கடந்த நூற்றாண்டின் ஐம்பதுகளுக்குத் திரும்ப வேண்டியதாகிவிடும். இது அரசியலில் பின்நோக்கியதாக கடந்து வந்த அடிகளைத் தேடுவதாகிவிடும். ஆனால், வளர்ந்துவிட்ட பூகோள அரசியல் யதார்த்தத்திற்கு இது சாத்தியப்பாடானதாக இருக்கமாட்டது.

ஜே.வி.பி யின் இந் நிபந்தனைகள் தமிழ் மக்கள் தொடர்பான மனிதாபிமான தேவைகள் அரசியல் உரிமைகள், மற்றும் அவர்களின் தேசியம் பற்றிய அனைத்துக் கோரிக்கைகளையும், தற்போதைய யுத்தநிறுத்த உடன்பாடு மற்றும் சமாதான முயற்சிகள் யாவற்றையும் நிராகரிப்பதாக உள்ளது.

சுனாமி மீள் கட்டமைப்பிற்கான பொதுக் கட்டமைப்பும், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை, இடைக்கால நிர்வாகம் போன்றவை நிராகரித்தல் . அதாவது தமிழ் மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை, தேவைகளை நிராகரித்தல் என்பதாக அமைகின்றது. இதேவேளை , யுத்தநிறுத்தம் மீள்பரிசீலனை செய்யப்படுதல், நோர்வேயின் பங்களிப்பை மீள் பரிசீலனைசெய்தல் என்பது தற்போதைய யுத்தநிறுத்த சூழலை இல்லாதொழித்துவிடுவதான செயற்பாடாக அமையத் தக்கதாகும்.

இந்த வகையில் பார்க்கையில் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பதோ பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பதோ ஜே.வி.பி யினால் நிராகரிக்கப்பட்டதொன்றாகிறது. இதேவேளை இதனை மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டு சனாதிபதித்தேர்தலில் வெற்றியடைவாரேயானால் இலங்கையில் மிக விரைவிலேயே யுத்தம் ஒன்றை எதிர்கொள்ள வேண்டியதாக இருக்கும்.

ஏனெனில், தமிழ் மக்கள் தமது உரிமைகள் தொடர்பான விடயத்தில் மிகவும் உறுதியாகவும், தெளிவாகவும் உள்ளனர். சிறிலங்கா அரசாங்கம் தமிழ்மக்களையும் தமது பிரஜைகள் எனக் கூறிக் கொள்வதனால் தான் அவ் அரசிடமிருந்து தமிழ் மக்களுக்கான மனிதாபிமான உரிமைகள், தேவைகள் என்பவை எதிர்பார்க்கப்படுகின்றன-வழங்கப்பட வேண்டும் எனக் கோரப்படுகின்றன.

ஆனால் சிறிலங்கா அரசாங்கம் அவற்றை வழங்கத் தவறும் பட்சத்தில் தனது பிரஜைகளுக்கு மேற்கொள்ள வேண்டியதான தார்மீகப் பணிகளை சிறிலங்கா அரசு உதாசீனம் செய்துள்ளது என்பதுடன் விவகாரம் கைவிடப்பட்டதாகிவிடும். இந்த வகையிலேயே சுனாமி அனர்த்த பொதுக்கட்டமைப்பு விவகாரம் விடுதலைப் புலிகளால் ஏற்கனவே கைவிடப் பட்டதாகிவிட்டது.

ஆகையினால் ஜே.வி.பி யின் நிபந்தனையை ஏற்றுக்கொண்டு மகிந்த ராஜபக்ஷ பொதுக்கட்டமைப்பைக் கைவிடுதல் என்பது இங்கு புதியதொருவிவகாரமுமல்ல; நெருக்கடியானதுமல்ல. ஆனால், தன்னாட்சி அதிகாரசபை, இடைக்கால நிபந்தனைகள் தொடர்பான விடயங்களைக் கைவிடுதல் என்பது சாத்தியப்பாடானதல்ல. ஏனெனில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் அடுத்த கட்டத்திற்கு நகர்வதற்கு அவை அவசியமானவையாகும்.

அதுமட்டுமன்றி இன்று மிகவும் நெருடிக்கடி நிலையிலாயினும் ஓரளவிற்கு நிலவிவரும் அமைதிச் சூழ்நிலையை முடிவிற்குக் கொண்டுவரும் வகையிலும் ஜே.வி.பி யின் நிபந்தனைகள் உள்ளன. குறிப்பாக யுத்தநிறுத்த உடன்பாட்டை மீள் பரிசீலனை செய்தல் நோர்வேயின் பங்களிப்பை மீள் பரிசீலனை செய்தல்-என்பவை ஏற்கனவே புலிகளால் நிராகரிக்கப்பட்டவையாகும்.

அதாவது விடுதலைப் புலிகள் இயக்கம் யுத்தநிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கம் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதே ஒழிய யுத்தநிறுத்த உடன்பாட்டை மீள் பரிசீலனை செய்தல் என்பதற்குத் தயாராக இல்லை. யுத்தநிறுத்த உடன்பாடு திருப்திகரமானது என்பதே அவர்களின் நிலைப்பாடு. அதே போன்றே நோர்வேயின் நடவடிக்கைகள் குறித்தும் புலிகள் தரப்பில் திருப்தி உள்ளது. ஆகையினால், நோர்வேயின் பங்களிப்புக் குறித்து மீள்பரிசீலனை என்பது தேவையற்றதொன்று என்பது அவர்களின் நிலைப்பாடு.

அது மட்டுமன்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பது ஒற்றையாட்சி அமைப்பிற்குள் என்றுமே சாத்தியப்பாடானதல்ல என்பது தமிழ் மக்கள் என்றோ முடிவு செய்துவிட்ட விடயமாகும். அதாவது இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பது குறைந்தபட்சம் கூட்டாட்சி என்பதன் அடிப்படையில் பேசப்பட வேண்டுமே ஒழிய ஒற்றையாட்சி முறைக்குள் தீர்வு காணப்படக் கூடியதொன்றல்ல என்பது தமிழ் மக்களின் நிலைப்பாடாகும்.

இதேவேளை தமிழ்மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்கப்படுதல் வேண்டும், இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையோ அன்றி இடைக்கால நிர்வாகம் ஒன்றோ உருவாக்கப்படுதல் வேண்டும். யுத்தநிறுத்தம் சீராக அமுல் செய்யப்படுதல் வேண்டும், இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையில் தீர்வொன்று காணப்படுதல் வேண்டும் என்பது போன்ற அம்சங்கள் அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளால் கூட ஏற்றுக்கொள்ளப்பட்டவையாகும்.

இந்நிலையில். ஜே.வி.பி யின் நிபந்தனைகள் என்பது தமிழ் மக்களினாலோ விடுதலைப் புலிகளினாலோ ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான வாய்ப்புக்கள் சிறிதளவு தானும் இருக்கப்போவதில்லை. இந்நிலையில் மகிந்தராஜபக்ஷ-ஜே.வி.பி கூட்டணி வெற்றி பெற்றால் இனப்பிரச்சினையை தவிர்க்கப்பட முடியாத நெருக்கடி ஒன்றிற்குள் இட்டுச் செல்வதாகவே இருக்கும்.

அதாவது நாடு யுத்தத்தை நோக்கி விரைந்து செல்வதாகவே இருக்கும். யுத்தம் தமிழ் மக்களுக்கு விருப்பமற்றதாக இருப்பினும் தவிர்க்கப்பட முடியாததாகிவிடும். இதனால் இலங்கையில் மீண்டும் அமைதி என்பது கேள்விக்குள்ளாகிவிடும். அதாவது ஜே.வி.பி யினதும், -மகிந்தராஜபக்ஷவினதும் கூட்டு வெற்றிபெறின் இலங்கையில் அமைதிச் சூழ்நிலை விரைவிலேயே தொலைந்து போய்விடும்.

ஜெயராஜ்

# தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல்-2005

கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவு

மூப்பின் அடிப்படையில் தெரிவானோர்

யா/க/4961 திரு.வேலுப்பிள்ளை வரதராஜன்.
யா/க/4975 திரு.சரவணமுத்து சச்சிதானந்தம்.
யா/க/4983 திருமதி.சரஸ்வதி செல்வநாயகம்.
யா/க/4987 திரு.வல்லிபுரம் தளையசிங்கம்.
யா/க/4993 திரு.சங்கரி சிவலிங்கம்.
யா/க/4995 திரு.ஆறன் சண்முகம்.
யா/க/5001 திருமதி.செல்வரத்தினம் முத்துச்சாமி.
யா/க/5005 திரு.கந்தன் இராசு.
யா/க/5012 திரு.சின்னத்தம்பி தங்கராசா.
யா/க/5017 திரு.முத்துக்குமாரு திருநாவுக்கரசு.
யா/க/5022 திரு.கதிரிப்பிள்ளை குமாரசூரியர்.
யா/க/5035 திரு.ஆறுமுகம் சிவக்கொழுந்து.
யா/க/5042 திரு.சிவக்கொழுந்து துரைசாமி.
யா/க/5061 திரு.மயிலு தர்மலிங்கம்.
யா/க/5067 திரு.இராசதுரை சதாசிவம்.
யா/க/5095 திருமதி.கனகம்மா கந்தசாமி.
யா/க/5096 திரு.சிற்றம்பலம் கணபதிப்பிள்ளை.
யா/க/5103 திரு.சுந்தரம் விசாகப்பெருமாள்.
யா/க/5108 திரு.முருகேசு கந்தசாமி.
யா/க/5109 திரு.கந்தையா இராசசிங்கம்.
யா/க/5120 திரு.வேலன் கந்தன்.
யா/க/5127 திருமதி.முத்துலட்சுமி கதிரவேலு.
யா/க/5129 திரு.பொன்னம்பலம் பரஞ்சோதி.
யா/க/5133 திரு.சிற்றம்பலம் இளையதம்பி.
யா/க/5160 திரு.சொக்கநாதன் நடராசா.
யா/க/5162 திரு.முருகப்பர் சுப்பிரமணியம்.
யா/க/5170 திரு.கருப்பையா பொன்னுச்சாமி.
யா/க/5174 திரு.வேலுப்பிள்ளை கந்தசாமி.
யா/க/5180 திரு.கதிரேசு பொன்னுத்துரை.
யா/க/5196 திரு.மாணிக்கம் சின்னத்துரை.
யா/க/5216 திரு.ஆழ்வாப்பிள்ளை இரத்தினசபாபதி.
யா/க/5226 திருமதி.இரத்தினம் கந்தசாமி.
யா/க/5259 திருமதி.செல்வலட்சுமி விஜயமூர்த்தி.
யா/க/5261 திரு.கந்தையா அருளானந்தம்.
யா/க/5263 திருமதி.சின்னத்தங்கம் இராசரட்ணம்.
யா/க/5270 திரு.கந்தையா செல்லையா.
யா/க/5273 திரு.கிருஷ்ணபிள்ளை திரவியசிங்கம்.
யா/க/5281 திரு.சின்னத்தம்பி நல்லதம்பி.
யா/க/5283 திரு.இராசையா வாமதேவன்.
யா/க/5302 திரு.முத்தன் சின்னத்தம்பி.
யா/க/5327 திரு.மாணிக்கம் சிவப்பிரகாசம்.
யா/க/5329 திரு.கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்.
யா/க/5332 திரு.வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை.
யா/க/5333 திரு.கணபதிப்பிள்ளை வேலாயுதம்.
யா/க/5336 திரு.வேலுப்பிள்ளை சின்னத்தம்பி.
யா/க/5340 திரு.கணபதிப்பிள்ளை வையித்திலிங்கம்.
யா/க/5349 திரு.சேனன் பசுபதி.
யா/க/5352 திருமதி.இலட்சுமி பரமு.
யா/க/5353 திரு.கணபதிப்பிள்ளை கந்தசாமி.
யா/க/5356 திரு.கணபதிப்பிள்ளை கந்தையா.
யா/க/5360 திரு.வேலுப்பிள்ளை ஆறுமுகம்.
யா/க/5371 திரு.கந்தையா திருநாவுக்கரசு.
யா/க/5372 திருமதி.சின்னம்மா வன்னியசிங்கம்.
யா/க/5376 திரு.நித்சிங்கம் குருகுலசிங்கம்.
யா/க/5377 திரு.முருந்தன் தம்பு.
யா/க/5382 திருமதி.அழகம்மா நல்லதம்பி.
யா/க/5384 திரு.தாமு பசுபதி.
யா/க/5389 திரு.கணபதிப்பிள்ளை சிவப்பிரகாசம்.
யா/க/5393 திரு.சபாபதி செல்வநாயகம்.
யா/க/5404 திரு.பாலர் வல்லிபுரம்.
யா/க/5417 திரு.கணபதிப்பிள்ளை சிவபாதம்.
யா/க/5480 திரு.சின்னத்துரை புண்ணியமூர்த்தி.
யா/க/5493 திரு.சுந்தரம் சிவகுரு.
யா/க/5508 திரு.கிறவுதர் திரவியரத்தினம் கஸ்பெஷன்.
யா/க/5513 திருமதி.கனகேஸ்வரி அப்புக்குட்டி.
யா/க/5537 திருமதி.வள்ளியம்மை பொன்னுச்சாமி.
யா/க/5539 திரு.கந்தன் குமாரு.
யா/க/5558 திரு.செல்லன் சீனித்தம்பி.
யா/க/5566 திரு.வயிரவன் முருகன்.
யா/க/5578 திரு.சின்னப்பு நடராசா.
யா/க/5579 திருமதி.செல்லம்மா தம்பிராசா.
யா/க/5586 திரு.வேலுப்பிள்ளை விஸ்வலிங்கம்.
யா/க/5605 திருமதி.அருந்தவமலர் கந்தையா.
யா/க/5606 திரு.இராசமசாமி சேர்ந்திவேல்.
யா/க/5615 திருமதி.அரியமலர் இரத்தினம்.
யா/க/5628 திரு.சின்னையா சிவகுரு.
யா/க/5636 திருமதி.பாக்கியம் வேலுப்பிள்ளை.
யா/க/5653 திருமதி.செல்லம்மா செல்வரத்தினம்.
யா/க/5654 திருமதி.சரஸ்வதி அப்புத்துரை.
யா/க/5680 திரு.சிவலை சரவணை.
யா/க/5681 திருமதிஇராசம்மா அல்பிரட்.
யா/க/5690 திரு.கணபதி சோமன்.
யா/க/5713 திரு.முருகன் மாணிக்கம்.
யா/க/5724 திருமதி.மரகதம் கதிரவேல்.
யா/க/5756 திருமதி.பொன்னம்மா மகாலிங்கம்.
யா/க/5780 திருமதி.தெய்வி கந்தன்.
யா/க/5786 திருமதி.செல்லம்மா கார்த்திகேசு.
யா/க/5798 திரு.கதிரவேலுப்பிள்ளை தம்பிராசா.
யா/க/5801 திரு.சிதம்பரன் கிருஸ்ணபிள்ளை.
யா/க/5807 திரு.கணபதிப்பிள்ளை தர்மகுலசிங்கம்.
யா/க/5810 திருமதி.லீலாவதி பொன்னம்பலம்.
யா/க/5811 திரு.கணபதிப்பிள்ளை பரஞ்சோதி.
யா/க/5824 திரு.சின்னத்துரை சிவசுப்பிரமணியம்.
யா/க/5828 செல்வன்.செல்லத்தம்பி சுதாஸ்கரன்.
யா/க/5833 திரு.சிதம்பரன் கிருஸ்ணபிள்ளை.
யா/க/5836 திருமதி.அன்னம்மா செல்லையா.
யா/க/5844 திருமதி.இலட்சுமி நல்லவன்.
யா/க/5858 திரு.வல்லிபுரம் செல்லையா.
யா/க/5864 திருமதி.பார்வதி சிற்றம்பலம்.
யா/க/5875 திருமதி.மீனாட்சியம்மா வல்லிபுரம்.
யா/க/5886 திரு.கந்தவனம் இராசரத்தினம்.
யா/க/5894 திருமதி.இராசமணி சீனித்தம்பி.
யா/க/5897 திருமதி.இராசம்மா பொன்னுத்துரை.
யா/க/5900 திருமதி.சந்திராதேவி கமலாகரன்.
யா/க/5923 திருமதி.பாக்கியம் சிவகுரு.
யா/க/5932 திருமதி.மாணிக்கம் சோமசுந்தரம்.
யா/க/5946 திருமதி.சிவபாக்கியம் மகாலிங்கம்.
யா/க/5951 திரு.சின்னத்தம்பி கருணைப்பிரகாசம்.
யா/க/5970 திருமதி.சின்னத்தங்கச்சி மயிலு.
யா/க/5981 திரு.இளையதம்பி சிவகுரு.
யா/க/5994 திருமதி.சபாநாயகி குமாரசாமி.
யா/க/6002 திரு.சின்னத்தம்பி சுப்பிரமணியம்.
யா/க/6005 திருமதி.சிவலோகநாயகி சதாசிவம்.
யா/க/6012 திரு.சின்னையா இரத்தினம்.
யா/க/6027 திரு.சிவலை சுந்தரம்.
யா/க/6046 திருமதி.பதுமை தம்பு.
யா/க/6050 திரு.செல்வன் இராசதுரை.
யா/க/6053 திருமதி.பாக்கியம் இராசையா.
யா/க/6088 திரு.முருகன் கனகன்.
யா/க/6089 திருமதி.இராசம்மா நாராயணபிள்ளை.
யா/க/6098 திரு.சிற்றம்பலம் கிருஸ்ணபிள்ளை.
யா/க/6100 திருமதி.இரத்தினம் மாணிக்கம்.
யா/க/6102 திரு.வாரிபெரியதம்பி.
யா/க/6106 திரு.வல்லிபுரம் வேலுப்பிள்ளை.
யா/க/6110 திருமதி.இராசம் சின்னக்கிளி.
யா/க/6113 திருமதி.சிவக்கொழுந்து நடராசா.
யா/க/6119 திரு.பரமுப்பிள்ளை சின்னத்தம்பி.
யா/க/6129 திருமதி.இலட்சுமியம்மா சாரங்கன்.
யா/க/6148 திருமதி.நல்லம்மா திருநாவுக்கரசு.
யா/க/6149 திரு.மயில்வாகனம் சின்னையா.
யா/க/6162 திரு.முருகேசு கணபதிப்பிள்ளை.
யா/க/6163 செல்வி.றோகினி தினகரம்பிள்ளை.
யா/க/6181 திருமதி.பாக்கியம் பெரியதம்பி.
யா/க/6183 திரு.கதிர்காமு கதிரித்தம்பி.
யா/க/6184 திருமதி.பாக்கியம் பிலிப்பு.
யா/க/6197 திரு.ஆறுமுகம் சின்னத்தம்பி.
யா/க/6207 திரு.முருகையா நாகராசா.
யா/க/6208 திருமதி.இராசம்மா வல்லி.
யா/க/6213 திரு.கதிரேசு மகாலிங்கம்
யா/க/6218 திரு.கணபதிப்பிள்ளை செல்லத்தம்பி.
யா/க/6225 திரு.இளையதம்பி நவரத்தினம்.
யா/க/6226 திரு.தாமு வேலுப்பிள்ளை.
யா/க/6238 திரு.பாலன் சின்னத்துரை.
யா/க/6242 திரு.கணபதிப்பிள்ளை இராசையா.
யா/க/6249 திருமதி.குலசக்தி ஏகாம்பரம்.
யா/க/6250 திரு.குழந்தை தர்மலிங்கம்.
யா/க/6278 திரு.சின்னையா சின்னத்தம்பி.
யா/க/6279 திருமதி.தெய்வானை ஏகசக்தி.
யா/க/ 6288 திரு.கனகசபை கணேசபிள்ளை.
யா/க/6302 திரு.ராமலிங்கம் இரத்தினம்.
யா/க/6315 திருமதி.இலட்சுமி கிட்டிணபிள்ளை.
யா/க/6320 திருமதி.சிவக்கொழுந்து நடேசன்.
யா/க/6329 திரு.நாகேந்திரஐயர் கணேசஐயர்.
யா/க/ 6333 திருமதி.இலட்சுமிப்பிள்ளை கந்தவனம்.
யா/க/6370 திரு.பஞ்சாட்சரக்குருக்கள் சச்சிதானந்தக்குருக்கள்.
யா/க/6371 திரு.வல்லியப்பர் பொன்னுத்துரை.
யா/க/6375 திரு.சங்கரப்பிள்ளை தம்பிஐயா.
யா/க/6376 திரு.சிலம்பு கந்தசாமி.
யா/க/6392 திருமதி.லட்சுமி பரமு.
யா/க/6401 திருமதி.பத்தினிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை.
யா/க/6402 திருமதி.பத்தினிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை.
யா/க/6403 திரு.மாரிமுத்து சின்னத்தம்பி.
யா/க/6425 திருமதி.இராசேஸ்வரி மகாதேவன்.
யா/க/6426 திரு.நாகப்பர் கதிர்காமத்தம்பி.
யா/க/6435 திரு.சரவணமுத்து சிவபாதசிங்கம்.
யா/க/6444 திரு.வல்லிபுரம் நாகப்பர்.
யா/க/6447 திருமதி.திரேசம்மா சேமமலை.
யா/க/6450 திருமதி.சியோன்மணி சிங்கன்.
யா/க/5460 திரு.சிற்றம்பலம் வீரகத்தி.
யா/க/6489 திருமதி.சரஸ்வதி சிவபாதம்.
யா/க/6492 திருமதி.செல்லம்மா வேலும்மயிலும்.
யா/க/6494 திரு.கணபதி தம்பிராசா
யா/க/6497 திருமதிஇலட்சுமி கனகசபை.
யா/க/6504 திருமதி.கனகம்மா முத்துக்குமாரு.
யா/க/6506 திரு.பொன்னன் துரையன்.
யா/க/6508 திரு.வீரகத்திப்பிள்ளை சோமசுந்தரம்.
யா/க/6526 திருமதிஇலட்சுமிப்பிள்ளை மார்க்கண்டு.
யா/க/6534 திருமதி.சிவகாமிப்பிள்ளை திருநாவுக்கரசு.
யா/க/6538 திருமதி.இரத்தினம் வல்லிபுரம்.
யா/க/6539 திரு.பொன்னையா சங்கரப்பிள்ளை.
யா/க/6548 திரு.தவசிப்பிள்ளை விசாகமுத்து நடராசா.
யா/க/6551 திருமதி.சந்தானலட்சுமி குலசிங்கம்.
யா/க/6573 திருமதி.மனோன்மணி சின்னத்தம்பி.
யா/க/6584 திரு.வேலுப்பிள்ளை இராசையா.
யா/க/6599 திரு.சந்திரசேகரம் வல்லிபுரம்.
யா/க/6602 திருமதி.பாறுவதி கத்தநி.
யா/க/6606 திரு.சந்திரசேகரர் விசுவநாதர்.
யா/க/6610 திரு.கந்தப்பு நமசிவாயம்.
யா/க/6621 திருவல்லி சண்முகம்.
யா/க/6625 திருமதி.மேரிகலீன் பீற்றர்பிள்ளை.
யா/க/6627 திருமதி.வள்ளி பொன்னன்.
யா/க/6633 திரு.சின்னையா தங்கரத்தினம்.
யா/க/ 6635 திரு.வேலாயுதம் முருகேசு.
யா/க/6641 திரு.சபாபதிப்பிள்ளை செல்லத்துரை.
யா/க/6653 திருமதி.கனகம்மா சதாசிவம்.
யா/க/6670 திரு.சிதம்பரப்பிள்ளை கந்தப்பு.
யா/க/6675 திருமதி.சரஸ்வதி பொன்னையா.
யா/க/6697 திரு.சடையர் பாலசுப்பிரமணியம்.
யா/க/6702 திருமதி.தங்கம்மா இரங்கநாதன்.
யா/க/6715 திருமதி.தங்கமுத்து சிங்காரவேலு.
யா/க/6723 திருமதி.இராசம்மா சிதம்பரப்பிள்ளை.
யா/க/6724 திருமதி.நல்லம்மா சுப்பிரமணியம்.
யா/க/6726 திருமதி.சின்னக்கிளி நாகலிங்கம்.
யா/க/6730 திருமதி.புவனேஸ்வரி வல்லிபுரம்.
யா/க/6731 திரு.வீரன் கிட்டிணர்.
யா/க/6735 திருமதி.இராசம்மா தில்லைநாதன்.
யா/க/6740 திருமதி.தங்கம் நாகமுத்து.
யா/க/6750 திருமதி.மேரிமக்டலின் அரியரட்ணம்.
யா/க/6751 திருமதி.அன்னரத்தினம் தியாகராசா.
யா/க/6764 திருமதி.செல்வநேசம் வீரவாகு.
யா/க/6766 திரு.கந்தையா பிள்ளையினார்.
யா/க/6769 திரு.கந்தவனம் தாமோதரம்பிள்ளை.
யா/க/6770 திரு.தம்பையா இராசரட்ணம்.
யா/க/6780 திரு.வைரவன் கிருஷ்ணன்.
யா/க/6784 திருமதி.மீனாட்சி கார்த்திகேசு.
யா/க/6795 திரு.கனகசபை தங்கவேல்.
யா/க/6796 திருமதி.அன்னம்மா மார்க்கண்டு.
யா/க/6804 திரு.வேலுப்பிள்ளை சின்னத்துரை.
யா/க/6809 திருமதி.மகேஸ்வரி பொன்னையா.
யா/க/6821 திரு.இரத்தினம் தர்மரத்தினம்.
யா/க/6826 திரு.சிதம்பரப்பிள்ளை நடராசா.
யா/க/6839 திருமதி.யோகம்மா மாணிக்கம்.
யா/க/6857 திருமதி.பாறுபதிப்பிள்ளை கந்தசாமி.
யா/க/6882 திருமதி.சின்னம்மா பொன்னையா.
யா/க/6891 திருமதி.அன்னம்மா கிருஸ்ணன்.
யா/க/6896 திருமதி.மனோன்மணி சிவகுமாரசாமி.
யா/க/6916 திருமதி.மீனாட்சியம்மா செல்லத்துரை.
யா/க/6919 திரு.வேலன் கந்தசாமி.
யா/க/6920 திரு.கதிரன் மாணிக்கம்.
யா/க/6922 திருமதி.செல்லம்மா சுந்தரம்.
யா/க/6942 திருமதி.சிவக்கொழுந்து கந்தசாமி.
யா/க/6952 திருமதி.சரஸ்வதி நடராஜா.
யா/க/6965 செல்வி.சிவக்கொழுந்து கணபதிப்பிள்ளை.
யா/க/6970 திரு.நல்லதம்பி நடராசா.
யா/க/6975 திருமதி.சின்னம்மா சின்னத்துரை.
யா/க/6982 திரு.வல்லிபுரம் செல்லத்துரை.
யா/க/6988 திருமதி.தங்கமணி சிதம்பரப்பிள்ளை.
யா/க/6990 திரு.முத்து தங்கவேல்.
யா/க/6991 திரு.செல்லையா கனகராசா.
யா/க/6994 திருமதி.கணபதிப்பிள்ளை இராசரத்தினம்.
யா/க/7006 திருமதி.திலகவதி கந்தசாமி.
யா/க/7012 திருமதி.தங்கம்மா கந்தப்பு.
யா/க/7029 திரு.வேலன் சின்னத்தம்பி.
யா/க/7031 திரு.கணபதிப்பிள்ளை சின்னத்துரை.
யா/க/7049 திருமதி.பத்மாவதி நவரட்ணசிங்கம்.
யா/க/7055 திரு.சுலோசிப்பிள்ளை மரியாம்பிள்ளை.
யா/க/7056 திருமதி.இரத்தினம் பொன்னுத்துரை.
யா/க/7059 திரு.நாகநாதன் நடராசா
யா/க/7069 திருமதி.அழகம்மா நாகலிங்கம்.
யா/க/7070 திருமதி.இரத்தினம் மாணிக்கம்.
யா/க/7074 திரு.பரமு கிருஸ்ணபிள்ளை.
யா/க/7077 திருமதி.தங்கம்மா சின்னத்தம்பி.
யா/க/7098 திரு.கந்தையா நடராசா.
யா/க/7101 திரு.கிட்டிணர் பாலசிங்கம்.
யா/க/7104 திரு.பழனி தர்மராசா.
யா/க/ 7108 திருமதி.பரமேஸ்வரி வல்லிபுரநாதன்.
யா/க/7114 திருமதி.தெய்வி கந்தன்.
யா/க/7119 திருமதி.தங்கம்மா கிருஸ்ணன்.
யா/க/7126 திரு.இராசரத்தினம் சபாநாதன்.
யா/க/7127 திருமதி.பவளம் ஐயாத்துரை.
யா/க/7136 திரு.சின்னத்தம்பி குணரத்தினம்.
யா/க/7137 திரு.பழனி சங்கரன்.
யா/க/7142 திருமதி.சொர்ணம்மா கிருஷ்ணபிள்ளை.
யா/க/7144 திருமதி.இலட்சுமி இளையதம்பி.
யா/க/ 7145 திருமதி.சின்னப்பிள்ளை சின்னவன்.
யா/க/ 7149 திருமதி.சிவப்பி மாணிக்கம்.
யா/க/ 7152 திரு.சின்னத்தம்பி சிவபாதம்.
யா/க/ 7154 திரு.இராமலிங்கம் விஸ்வலிங்கம்.
யா/க/7159 திருமதி.வள்ளிப்பிள்ளை செல்லையா.
யா/க/7164 திருமதி.சரஸ்வதியம்மா மயில்வாகனம்.
யா/க/7171 திருவைரமுத்து நாகலிங்கம்.
யா/க/ 7184 திரு.கந்தன் சின்னத்தம்பி.
யா/க/7195 திரு.சிலம்பன் முருகன்.
யா/க/7197 திரு.மயிலன் சண்முகம்.
யா/க/7203 திருமதி.செல்லம்மா சதாசிவம்.
யா/க/7204 திருமதி.தங்கமுத்து சுப்பிரமணியம்.
யா/க/7208 திருமதி.அழகம்மா பொன்னையா.
யா/க/7254 திருமதி.தங்கம்மா ஆசைப்பிள்ளை.
யா/க/7261 திரு.அண்ணாமலை மகாதேவன்.
யா/க/7278 திரு.கந்தப்பு பொன்னம்பலம்.
யா/க/7298 திரு.சின்னத்தம்பி தர்மராசா.
யா/க/7334 திருமதி.இரத்தினம் செல்லக்குட்டி.
யா/க/7348 திருமதி.சின்னாச்சி ஆழ்வாப்பிள்ளை.
யா/க/7377 செல்வி.பாலபரமேஸ்வரி வேலுப்பிள்ளை.
யா/க/7381 திருமதி.முத்துலக்சுமி மாணிக்கம்.
யா/க/7397 திருமதி.இந்திராணியம்மாள் சுந்தரலிங்கம்.

# தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல்-2005

**கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவு**

**மூப்பின் அடிப்படையில் தெரிவானோர்**

யா/க/7417 திருமதி.சரஸ்வதி கதிரவேலு.
யா/க/7420 திருமதி.பரலோகநாயகி அருமைநாயகம்.
யா/க/7452 திரு.செல்லையா வல்லிபுரம்.
யா/க/7457 திரு.கணபதிப்பிள்ளை வீரகத்தி.
யா/க/7468 திருமதி.கணபதிப்பிள்ளை பாலசிங்கம்.
யா/க/7481 திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தப்பு.
யா/க/7486 திரு.நந்தவனம் சுப்பிரமணியம்.
யா/க/7487 திருமதி.அன்னமுத்து தம்பையா.
யா/க/7490 திருமதி.நாகம்மா குமாரசாமி.
யா/க/7493 திருமதி.பிறிசித்தம்மா நீக்கொலஸ்.
யா/க/7496 திருமதி.அன்னம்மா சோமசுந்தரம்.
யா/க/7504 திருமதி.சின்னாச்சி சபாநாயகம்.
யா/க/7516 திரு.சிவக்கொழுந்து சின்னத்தம்பி.
யா/க/7543 திரு.தேவசகாயம் வேதநாயகம்.
யா/க/7561 திரு.ஐயம்பிள்ளை கந்தையா.
யா/க/7562 திரு.வேலன் சபாபதி.
யா/க/7573 திரு.கந்தன் சின்னப்பு.
யா/க/7574 திரு.சின்னத்தம்பி கதிரவேற்பிள்ளை.
யா/க/7577 திரு.பஞ்சநாதக்குருக்கள் மகேஸ்வரசர்மா.
யா/க/7578 செல்வி.வள்ளியம்மை வேலுப்பிள்ளை.
யா/க/7603 திரு.முருகேசு தங்கராசா.
யா/க/7604 திருமதி.லட்சுமிப்பிள்ளை வல்லிபுரம்.
யா/க/7610 திரு.சரவணமுத்துக்குமாரசூரியர் அருளம்பலக் குமாரசூரியர்.
யா/க/7629 திரு.ஆறுமுகம் வீரகத்தி.
யா/க/7631 திரு.சின்னம்மா இரத்தினம்.
யா/க/7681 திருமதி.சின்னம்மா சுப்பிரமணியக்குருக்கள்.
யா/க/7689 திரு.ஆறுமுகம் பரராசசிவம்.
யா/க/7693 திரு.சின்னத்தம்பி கருணாசிங்கம்.
யா/க/7709 திருமதி.இராசம்மா ஆறுமுகம்.
யா/க/7722 திரு.இளையகுட்டி நடராசா.
யா/க/7726 திரு.பாலன் சுந்தரன்.
யா/க/7745 திரு.ஞானியர் கனேசையர்.
யா/க/7746 திருமதி.பொன்னம்மா கந்தையா.
யா/க/7768 திரு.வல்லிபுரம் தியாகராசா.
யா/க/7789 திருமதி.தஞ்சம்மா சின்னத்துரை.
யா/க/7804 திரு.நடேசு பாஸ்கரன்.
யா/க/7806 திரு.கந்தையா பொன்னையா.
யா/க/7820 திருமதி.தங்கமுத்து கந்தையா.
யா/க/7823 திருமதி.மகேஸ்வரி கனகசபை.
யா/க/7847 திரு.முருகேசு இளையதம்பி.
யா/க/7848 திருமதி.இலட்சுமி சுப்பன்.
யா/க/7858 திரு.சீனியன் கந்தையா.
யா/க/7868 திரு.வீரகத்தி சின்னத்துரை.
யா/க/7880 திரு.மெல்லியன் மாணிக்கம்.
யா/க/7901 திரு.கந்தசாமி பரமானந்தம்.
யா/க/7913 திருமதி.அன்னபூரணம் கதிர்காமத்தம்பி.
யா/க/7926 திரு.கணபதிப்பிள்ளை முருகேசு.
யா/க/7938 திரு.சின்னையா வைத்திலிங்கம்.
யா/க/7943 திருமதி.நாகரத்தினம் பொன்னையா.
யா/க/7944 திருமதி.மீனாட்சி சண்முகம்.
யா/க/7949 திருமதி.பாக்கியம் பொன்னுத்துரை.
யா/க/7968 திரு.வல்லிபுரம் குமாரசாமி.
யா/க/7973 திரு.செல்வநாயகம் சிவலிங்கம்.
யா/க/7981 திரு.குமரேசு வீரவாகு.
யா/க/7993 திருமதி.சின்னம்மா வல்லி.
யா/க/ 8003 திரு.கிருஸ்ணபிள்ளை எதிர்வீரசிங்கம்.
யா/க/ 8005 திரு.கந்தசாமி தங்கராசா.
யா/க/8012 திரு.இளையதம்பி கணபதிப்பிள்ளை.
யா/க/ 8025 திருமதி.சோபனம் இராசா.
யா/க/ 8030 திரு.சீனிவாசகம் சண்முகம்.
யா/க/8038 திருமதி.இலட்சுமி சிதம்பரம்.
யா/க/ 8040 திருமதி.சிவகாமிப்பிள்ளை மாணிக்கம்.
யா/க/ 8046 திரு.வல்லி நாகநாதி.
யா/க/8049 திரு.கந்தையா குமாரசுவாமி.
யா/க/ 8059 திரு.சின்னதம்பி ஆறுமுகம்.
யா/க/ 8060 திருமதி.பொன்னம்மா இரத்தினம்.
யா/க/ 8067 செல்வி.விசாலாட்சி வேலுப்பிள்ளை.
யா/க/ 8075 திரு.செல்லையா தங்கராசா.
யா/க/8086 திரு.குமரையா பரமசிவம்.
யா/க/8090 திருமதி.சின்னத்தங்கம் செல்லன்.
யா/க/8112 திருமதி.சின்னப்பிள்ளை இராசன்.
யா/க/ 8122 திரு.சின்னக்குட்டி சின்னையா.
யா/க/ 8135 திரு.வீரகத்தி சிதம்பரபிள்ளை.
யா/க/ 8149 திரு.கிருஷ்ணபிள்ளை பொன்னுத்துரை.
யா/க/ 8150 திரு.வல்லிபுரம் கார்த்திகேசு.
யா/க/ 8166 திரு.குணரத்தினம் சின்னத்தம்பி.
யா/க/ 8167 திருமதி.செல்லாச்சி பொன்னம்பலம்.
யா/க/8176 திரு.ஆறுமுகம் சாம்பசிவம்.
யா/க/ 8177 திரு.ஆறுமுகம் நடராசா.
யா/க/ 8182 திருமதி.செல்வபாக்கியம் இராசதுரை.
யா/க/ 8186 திரு.நாகன் தில்லையன்.
யா/க/ 8192 திரு.கணபதிப்பிள்ளை செல்வநாயகம்.
யா/க/ 8202 திருமதி.மகேஸ்வரி செல்லத்துரை.
யா/க/ 8204 திருமதி.அன்னலட்சுமி கந்தையா.
யா/க/8206 திரு.சண்முகம் நடேசன்.
யா/க/ 8218 திரு.பாலன் பொன்னன்.
யா/க/ 8221 திருமதி.சொர்ணம்மா சுப்பிரமணியம்.
யா/க/ 8224 திருமதி.சரஸ்வதி சுப்பிரமணியம்.

**காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு**

**மூப்பின் அடிப்படையில் தெரிவானோர்**

யா/கா/40 திரு.ஆறுமுகம் இராசநாயகம்.
யா/கா/61 திரு.சண்முகம் பேரம்பலம்.
யா/கா/63 திருமதி.இராஜராஜேஸ்வரி பொன்னையா.
யா/கா/ 66 திரு.கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்.
யா/கா/71 திருமதி.தவமணி மகாதேவா.
யா/கா/77 திரு.சிவப்பிரகாசம் இரத்தினசபாபதி.
யா/கா/99 திருமதி.செல்லாச்சி இராசையா.
யா/கா/107 திரு.சங்கரப்பிள்ளை தில்லையம்பலம்.
யா/கா/108 திரு.முத்தையா பரமநாதன்.
யா/கா/152 திரு.முருகர் வைரமுத்து.
யா/கா/155 திரு.கந்தையா சுப்பிரமணியம்.
யா/கா/156 திரு.ஆறுமுகம் சிற்றம்பலம்.
யா/கா/163 திரு.நாகமுத்து நடராசா.
யா/கா/164 திருமதி.பரமேஸ்வரி நமசிவாயம்.
யா/கா/167 திரு.முருகேசு சின்னத்துரை.
யா/கா/179 திரு.இராசையா செல்லத்துரை.
யா/கா/184 திரு.கந்தையா சிவஞானம்.
யா/கா/187 திருமதி.ரோகணிஅம்மா கணேசபிள்ளை.
யா/கா/203 திருமதி.பரிமளம் செல்லத்துரை.
யா/கா/212 திருமதி.சரஸ்வதி மார்க்கண்டு.
யா/கா/221 திரு.தம்பிப்பிள்ளை முருகேசு.
யா/கா/224 திரு.கார்த்திகேசு நாகேந்திரம்.
யா/கா/234 திரு.தம்பர் காசிப்பிள்ளை முருகேசு.
யா/கா/251 திரு.சபாபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை.
யா/கா/259 திருமதி.நீலாவதி துரைராஜசிங்கம்.
யா/கா/267 திருமதி.அமுதம் தர்மலிங்கம்.
யா/கா/276 திருமதி.பாக்கியம் இராசதுரைசிங்கம்.
யா/கா/284 திருமதி.சிவசோதி இரத்தினசிங்கம்.
யா/கா/293 திருமதி.மனோன்மணி நல்லதம்பி.
யா/கா/301 திரு.குமாரவேல்பிள்ளை நமசிவாயம்.
யா/கா/302 திரு.சங்கரப்பிள்ளை சேனாதிராசா.
யா/கா/329 திரு.நமசிவாயம் குமாரசாமி.
யா/கா/331 திரு.கந்தையா பாலசிங்கம்.
யா/கா/336 செல்வி.மகேஸ்வரி ஆறுமுகம்.
யா/கா/340 திரு.கந்தையா கனகசபை.
யா/கா/342 திரு.கந்தையா கிருஷ்ணதாஸ்.
யா/கா/346 திருமதி.பரமேஸ்வரி செல்வநாயகம்பிள்ளை.
யா/கா/348 திருமதி.கோமதி நாகேந்திரம்.
யா/கா/354 திருமதி.முத்தம்மா சுப்பிரமணியம்.
யா/கா/361 திரு.குமாரு வேலுப்பிள்ளை.
யா/கா/363 திரு.கணபதிப்பிள்ளை நல்லையா.
யா/கா/376 திரு.நாகமுத்து நாகலிங்கம்.
யா/கா/377 திருமதி.சரஸ்வதி திருநாவுக்கரசு.
யா/கா/381 திரு.சிவகுரு கந்தையா.
யா/கா/393 திரு.விஸ்வநாதஐயர் மகாதேவசர்மா.
யா/கா/394 திரு.பொன்னம்பலம் சங்கரப்பிள்ளை.
யா/கா/395 திரு.ஆறுமுகம் சுப்பிரமணியம்.
யா/கா/408 திருமதி.பார்வதி சேனாதிராசா.
யா/கா/413 திருமதி.சின்னாச்சிப்பிள்ளை கதிரவேலு.
யா/கா/417 திரு.வேலுப்பிள்ளை நடராசா.
யா/கா/418 திரு.கணபதிப்பிள்ளை கார்த்திகேசு நடராசா.
யா/கா/443 திரு.பொன்னம்பலம் சுப்பிரமணியம்.
யா/கா/450 திருமதி.பராசக்தி சோமசுந்தரம்.
யா/கா/458 திரு.தில்லையம்பலம் சிவசம்பு.
யா/கா/463 திரு.கதிரன் சுப்பன்.
யா/கா/467 திரு.அப்புத்துரை கிருஸ்ணபிள்ளை.
யா/கா/476 திருமதி.கனகம்மா பொன்னம்பலம்.
யா/கா/481 திரு.கணபதிப்பிள்ளை இந்திரன்.
யா/கா/491 திருமதி.பார்வதி பாலசுப்பிரமணியம்.
யா/கா/492 திரு.கதிரவேலு தில்லையம்பலம்.
யா/கா/496 திருமதி.சரஸ்வதி ஆறுமுகம்.
யா/கா/497 திருமதி.அலிஸ்நாகம்மா பெஞ்சமின்.
யா/கா/498 திருமதி.லீலாவதி முருகேசு.
யா/கா/504 திருமதி.நாகம்மா பொன்னம்பலம்.
யா/கா/534 திரு.ஆறுமுகம் இராஜகோபால்.
யா/கா/535 திரு.கந்தையா நடராசா.
யா/கா/538 திரு.அம்பலவாணர் கனகசபை.
யா/கா/558 திரு.கயிலாசபிள்ளை சடாட்சரம்.
யா/கா/567 திரு.கணபதிப்பிள்ளை சோமசுந்தரம்.
யா/கா/568 திருமதி.பாலாமணி கந்தசாமி.
யா/கா/571 திருமதி.பரமேஸ்வரி இராசையா.
யா/கா/578 திரு.நமசிவாயம் நடராசா.
யா/கா/586 திரு.வேலுப்பிள்ளை கதிரவேலு.
யா/கா/602 திரு.சுப்ரமணியம் தம்பிப்பிள்ளை.
யா/கா/604 திரு.ஆறுமுகம் கோவிந்தபிள்ளை.
யா/கா/610 திருமதி.மகேஸ்வரி நமசிவாயம்.
யா/கா/612 திருமதி.யோகாம்பிகை கணேஷபிள்ளை.
யா/கா/634 திரு.கதிர்காமு திருஞானந்தம்.
யா/கா/642 திரு.வெற்றிவேலு குலசேகரம்பிள்ளை.
யா/கா/661 திருமதி.மகேஸ்வரி நீலகண்டர்.
யா/கா/663 திரு.செல்லப்பா மாணிக்கவாசகர்.
யா/கா/668 திருமதி.கனகாம்பிகை பேரம்பலம்.
யா/கா/684 திரு.முத்துக்குமாரு தெட்சனாமூர்த்தி.
யா/கா/692 திரு.குமாரசாமிஐயர் அமிர்தேஸ்வரசர்மா.
யா/கா/694 திரு.சுப்பிரமணியம் முருகேசு.
யா/கா/696 திருமதி.பரமேஸ்வரி நல்லையா.
யா/கா/698 திருமதி.மகேஸ்வரி நடராசா.
யா/கா/701 திரு.குமாரவேலு கதிரவேலு.
யா/கா/704 திரு.வேலன் ஆறுமுகம்.
யா/கா/705 திரு.கந்தையா நல்லையா.
யா/கா/724 திரு.மெல்கம் ஜெமினி சுரேந்திரா.
யா/கா/744 திரு.சதாசிவம் சண்முகம்.
யா/கா/748 திரு.வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்.
யா/கா/749 திரு.துரையப்பா கார்த்திகேசு.
யா/கா/764 திரு.சண்முகம் இராமுப்பிள்ளை.
யா/கா/776 திரு.நமசிவாயம் குமாரசாமி.
யா/கா/780 திரு.கந்தப்பு சிவசம்பு.
யா/கா/790 திருமதி.கிரேஸ்அழகம்மா ஜெயராசசிங்கம்.
யா/கா/791 திரு.நாகலிங்கம் கணேசு.
யா/கா/793 திரு.முருகேசு சிவஞானரத்தினம்.
யா/கா/798 திருமதி.இராசமீனாட்சி பொன்னுத்துரை.
யா/கா/812 திரு.கந்தன் கார்த்திகேசு.
யா/கா/822 திருமதி.அன்னலட்சுமி ஐயம்பிள்ளை.
யா/கா/831 திரு.தம்பிமுத்து செல்லையா.
யா/கா/849 திருமதி.சிவகாமிப்பிள்ளை ஆறுமுகம்.
யா/கா/855 திரு.கந்தையா ஆறுமுகம்.
யா/கா/863 திரு.சிவசம்பு சிவநேசன்.
யா/கா/866 திரு.பரமன் திருநாவுக்கரசு.
யா/கா/874 திரு.தாமோதரம்பிள்ளை செல்லத்துரை.
யா/கா/910 திரு.கந்தையா அழகசுந்தரம்.
யா/கா/912 திரு.சுப்பிரமணியம் அருளம்பலம்.
யா/கா/919 திரு.வேலுப்பிள்ளை நடராசா.
யா/கா/930 திருமதி.பூரணம் இலட்சுமணப்பிள்ளை.
யா/கா/937 திருமதி.அன்னமுத்து கணேசபிள்ளை.
யா/கா/941 திரு.கந்தையா மகாதேவன்.
யா/கா/967 திருமதி.பராசக்தி கந்தையா.
யா/கா/968 திருமதி.செல்லம்மா ஆறுமுகம்.
யா/கா/970 திரு.செல்லையா மாணிக்கவாசகர்.
யா/கா/973 திருமதி.செல்லம்மா தம்பிராசா.
யா/கா/982 திருமதி.அபிராமிப்பிள்ளை சுப்பிரமணியம்.
யா/கா/997 திரு.கந்தையா தம்பிராசா.
யா/கா/1004 திரு.சுப்பிரமணியம் இரத்தினம்.
யா/கா/1010 திரு.அப்புக்குட்டி அரியரத்தினம்.
யா/கா/1047 திரு.முருகுப்பிள்ளை கந்தையா.
யா/கா/1061 திரு.அரியகுட்டி இராசையா.
யா/கா/1067 திரு.கந்தையா நாகமணி.
யா/கா/1085 திரு.ஆறுமுகம் நமசிவாயம்.
யா/கா/1097 திரு.நல்லதம்பி வேலுப்பிள்ளை.
யா/கா/1103 திரு.சிதம்பரப்பிள்ளை நடராசா.
யா/கா/1109 திருமதி.மகேஸ்வரி ஆறுமுகம்.
யா/கா/1130 திருமதி.சரஸ்வதி காசிநாதர்.
யா/கா/1134 திரு.பொன்னம்பலம் பாலசிங்கம்.
யா/கா/1137 திருமதி.கதிராசி முருகேசு.
யா/கா/1152 திரு.கந்தையா துரைச்சாமி.
யா/கா/1154 திருமதி.விசாலட்சி சுப்பிரமணியம்.
யா/கா/1159 திரு.கா.சின்னத்தம்பி செல்லத்துரை.
யா/கா/1165 திருமதி.கண்ணகையம்மா தம்பையா.
யா/கா/1168 திரு.கனகசபை பாலசுப்பிரமணியம்.
யா/கா/1173 திருமதி.கோமளவல்லி நடராஜா.
யா/கா/1176 திரு.முருகேசு தியாகராஜா.
யா/கா/1178 திரு.கார்த்திகேசு சிவஞானசுந்தரம்.
யா/கா/1196 திருமதி.சின்னம்மா முருகேசு.
யா/கா/1219 திருமதி.சின்னம்மா சுப்பிரமணியம்.
யா/கா/1225 திருமதி.செல்லம்மா கணபதிப்பிள்ளை.
யா/கா/1235 திரு.வேலன் ஐயம்பிள்ளை.
யா/கா/1240 திரு.கந்தையா நாராயணசாமி.
யா/கா/1245 திரு.கதிரவேலு கணபதிப்பிள்ளை.
யா/கா/1256 திருமதி.பூரணம் வேலுப்பிள்ளை.
யா/கா/1258 திருமதி.சௌந்தராம்பிகா திருச்சிற்றம்பலம்.
யா/கா/1259 திரு.செல்லத்துரை துரைராசா.
யா/கா/1278 திருமதி.சவுந்தராம்பிகை வயித்திலிங்கம்.
யா/கா/1285 திரு.வயிரமுத்து நல்லதம்பி.
யா/கா/1307 திருமதி.நாகம்மா பரமநாதன்.
யா/கா/1309 திரு.பேரம்பலம் கணவதிப்பிள்ளை.
யா/கா/1311 திரு.கந்தையா நல்லதம்பி.
யா/கா/1313 திரு.அப்புக்குட்டி மார்க்கண்டு.
யா/கா/1319 திரு.கந்தர் பரதராசா.

**பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவு**

**மூப்பின் அடிப்படையில் தெரிவானோர்**

கி/ப/8 திரு.சுவாமிநாதர் கந்தையா நல்லையா.
கி/ப/63 திரு.சின்னர் ஆறுமுகம்.
கி/ப/64 திரு.ஆறுமுகம் கந்தையா.
கி/ப/ 79 திரு.செல்லையா சிற்றம்பலம்.
கி/ப/87 திரு.வேலாயுதம் கணபதிப்பிள்ளை.
கி/ப/102 திரு.கணபதிப்பிள்ளை புண்ணியர்.
கி/ப/105 திரு.சின்னையா பெரியதம்பி.
கி/ப/108 திரு.கந்தையா பொன்னையா.
கி/ப/139 திரு.காசிப்பிள்ளை கணபதிப்பிள்ளை.
கி/ப/180 திரு.முத்து மரியநாயகம்.
கி/ப/182 திரு.சின்னக்குட்டியர் பொன்னுத்துரை.
கி/ப/187 திருமதி.ஞானப்பூங்கோதை கதிரமலைநாதன்.
கி/ப/191 திரு.கந்தையா சின்னத்துரை.
கி/ப/194 திரு.வேலுப்பிள்ளை கந்தசாமி.
கி/ப/203 திரு.தம்பையா சிவப்பிரகாசம்.
கி/ப/207 திரு.மனுவேற்பிள்ளை பீற்றர் பெனடிற்.
கி/ப/236 திரு.வீரசிங்கம் சுப்பிரமணியம்.
கி/ப/249 திருமதி.தங்கம் சின்னத்தம்பி.
கி/ப/253 திருமதி.கற்பகம் சிதம்பரி.
கி/ப/265 திரு.இளையதம்பி இரத்தினம்.
கி/ப/270 திருமதி.கனகம்மா யோன்.
கி/ப/297 திரு.கார்த்திகேசு இராசரத்தினம்.
கி/ப/308 திரு.யாக்கோப்பு மரியநாயகம்.
கி/ப/327 திருமதி.அன்னம்மா அந்தோனிப்பிள்ளை.
கி/ப/343 திரு.சுப்பர் சின்னத்துரை.
கி/ப/353 திருமதி.பாக்கியம் சண்முகம்.
கி/ப/356 திருமதி.செல்லம்மா தம்பிப்பிள்ளை.
கி/ப/360 திரு.கதிர்காமு செல்லத்துரை.
கி/ப/370 திருமதி.அடைக்கலம் அந்திரேசு.
கி/ப/373 திரு.ஆறுமுகம் கந்தையா.
கி/ப/376 திரு.வயிரவிப்பிள்ளை நாகலிங்கம்.
கி/ப/382 திருமதி.பொன்னம்மா வைத்திலிங்கம்.
கி/ப/386 திரு.லாசறு தேவசகாயம்.

(தொடரும்...)

கிளி/மாவட்ட கூட்டுறவுச் சபையும்
கிளி/மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களும்
இணைந்து நடாத்தும்

# 83 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினம் 2005

தலைமை:- திரு கார்த்திகேசு அவர்கள்
(தலைவர் பூநகரி ப. நோ. கூ. சங்கம்)
காலம் :- 10.09.2005 சனிக்கிழமை பி.பகல் 3.30 மணி
இடம் :- பூநகரி ப. நோ. கூ.சங்கம்-வாடியடி

அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

இங்ஙனம்
விழாக்குழுவினர்.

(சி.12693)

# அறிவித்தல்

## வவுனியா ப. நோ.கூ. சங்கம் உறுப்பினர் பட்டியல் காட்சிப்படுத்தல்

வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைப் பொதுச்சபைக் சபைக்கூட்டத்தில் பங்குபற்றி வாக்களிக்க தகுதிபெறும் உறுப்பினர்களின் கிளை ரீதியான பட்டியல் அவ்வக்கிளை நிலையங்களிலும், சகல கிளைகளினது பட்டியல்கள் சங்கத்தின் தலைமைப் பணிமனையிலும் 05. 09. 2005 ஆம் திகதி தொடக்கம் 19. 09. 2005 ஆம் திகதிவரை உறுப்பினர்கள் பார்வையிடுவதற்காக காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.

தற்போது இயங்காதிருக்கும் நொச்சிமோட்டை, இரணை இலுப்பைக்குளம் ஆகியவற்றைச் சேர்ந்த கிளை அங்கத்தவர்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பட்டியல்களைச் சங்கத்தின் தலைமைப் பணிமனையில் பார்வையிடலாம்.

காட்சிப்படுத்தப்படும் காலத்துக்குள் உறுப்பினர்களிடையே இருந்து எழுத்து மூலம் சமர்ப்பிக்கும் ஆட்சேபனைகள், மேன்முறையீடுகள் எதிர் வரும் 20. 09. 2005 ஆம் திகதிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக

"பொதுச் செயலாளர்
வ. ப. நோ. கூ. சங்கம்
பொதிமண்டப வீதி
வவுனியா.", என்ற முகவரிக்கு
அனுப்பி வைக்கவும்.

வ.ப. நோ.கூ. சங்கம்,
வவுனியா,
01.09.2005.

ந. சிவகுமாரன்,
பொதுச்செயலாளர்.

(சி.12680)

# Immediate Vacancy

**solidar**
An INGO consortium including NPA, SAH and ASB

## Project coordinator-Rehabilitation and physical Infrastructure Development

Applications are requested from experienced person in the field of Health and Rehabilitation , management and Co-ordination.

Solidar is a consortium of organizations of 12 European countries that supports a broad range of portfolio of Projects . The Solidar network in sriLanka comprises of three international NGO's - Arbetiter-samariter-Bund (ASB), Norwegian people's Aid (NPA), and swiss Labour Assistance (SAH).

The position is based in Kilinochchi.The Project proposes the creation of a Trauma, Counseling and Rehabilitation Centre to respond to the needs of people with disabilities as well as skill development and strengthening. The selected candidate will work in collaboration with the project manager, coordinate and implement activities relating the project.

### Duties will include-

* Collaboration on needs assessments with the local partner
* Identification of beneficiaries relating the project activities
* Planning and strategizing the project activities and awareness programmes
* Resourese management and reporting.

### Required qualifications:

* At least 3-5 Years experience in the relevant field with excellent references Advanced Computer skills.
* Communication skills with fluency in written/ spoken English and Tamil;language skills in sinhala would be an advantage.
* The Applicant should work independently and motivated in relation to excellent social communication skills
* A marked understanding of disability and beneficiaries requirements.

### Period of Contract

One Year
Extension will be considered based on the performance and the requirement at the time.

Cover letter and curriculum vitae should be addressed to.
Ms.Kathrin klemm,solider,No. 156,jaffna Road, paranthan.(Tel;021-228 5070 /5107)
Deadline for application is 16 th of september 2005.

Norwegian People's Aid
ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V.
Swiss Labour Assistance SAH

(சி.12677)



# இங்கிலாந்து அணிக்கு புதிய நெருக்கடி இயன்பெல் காயம்; கொலிங்வூட் வருகிறார்



அவுஸ்திரேலிய இங்கிலாந்து அணிகள் பங்குபற்றும் ஆஷஸ் கிண்ணத்துக்கான இறுதியும் ஐந்தாவதுமான டெஸ்ட் போட்டி நாளை ஓவல் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ள நிலையில் இங்கிலாந்து அணிக்கு புதிய நெருக்கடியொன்று ஏற்பட்டுள்ளது.

அவ்வணியின் இயன் பெல் கடந்த சனியன்று நடைபெற்ற கவுண்டி ஒரு நாள் போட்டியொன்றின்போது காயமடைந்ததே அந்நெருக்கடியாகும். முன்னாள் தேசிய அணி வீரரான நிக்நைட் தலைமையிலான வோர்விக்சயர் அணியில் பங்கேற்ற பெல் ஹம்சயர் அணிக்கெதிரான போட்டியில் பங்கு பற்றின. எனினும் அவ்வணி 18 ஓட்டங்களால் ஹம்சயர் அணியிடம் தோல்வியுற்றது.

இப்போட்டியில் அவர் கடைசி ஓவரின் கடைசி பந்துவீச்சின்போது காயத்துக்குள்ளானார் என நிக்நைட் தெரிவித்துள்ளார். அப் போட்டியில் நைட் 118 ஓட்டங்களையும், பெல் 54 ஓட்டங்களையும் பெற்றனர். ஆஷஸ் இறுதிப் போட்டியில் பெல்லுக்குப்பதிலாக போல் கொலிங்வூட் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தற்போதைய உயர்ந்த நிலை எதிர்காலத்திலும் தொடரும்




தற்போதைய சூழ்நிலையில் தமது அணி உயர்ந்த இடத்தை எட்டியுள்ளதாகவும், சிறப்பாக செயற்படுவதாகவும் எதிர்காலத்திலும் இந்த நிலை தொடரும் என்றும் சிறிலங்கா கிரிக்கெட் அணித்தலைவர் மார்வன் அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் அணியுடனான மூன்று ஒரு நாள் போட்டித் தொடரை முழுமையாகக் கைப்பற்றியதையடுத்து அவர் கருத்துத் தெரிவித்தபோது மூன்றாவது போட்டியில் மேலும் பல வீரர்களை அறிமுகப்படுத்த எண்ணியதாகவும் அவர்களும் எதிர்பார்த்தவாறு திறமையை வெளிப்படுத்தியதாகவும், தெரிவித்ததுடன் பங்களாதேஷ் அணியை வெற்றிபெற நினைத்த போதும் இவ்வாறு இலகுவில் வெல்லுவோம் என எதிர்பார்க்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கும்போது சொந்த மண்ணில் நாங்கள் வெற்றிகொள்வது போன்று ஏனைய அணிகளை அதன் மண்ணில் வெற்றிகொள்ள இதே திறமையைத் தொடருவோம் என்றார். பயிற்றுனர் டொம்மோடி பற்றிக் கூறும் போது அவர் அணிக்கு ஏற்றவாறு பயிற்சியளித்து வருவதாகக் கூறினார். மோடி தெரிவிக்கும்போது இளம் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் உப்புள் தரங்க திறமையாகச் செயற்படுவதாகவும், எதிர்காலத்தில் அவர் நட்சத்திர வீரராக வரும் வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்தார்.



நியூயோர்க்கில் நடந்துவரும் அமெரிக்க ஓபன் டென்னிசில் - விளையாட்டு ரசிகர்கள் ஆவலோடு எதிர்பார்த்த மற்றொரு போட்டியும் கடந்த ஞாயிறு நடந்தது. அமெரிக்க டென்னிஸ் சகோதரிகள் வீனஸ் -செரினா வில்லியம்ஸ் இடையே நடந்த மோதலே அது. இந்தப் போட்டியில் வீனஸ் வில்லியம்ஸ் (வலது) 7-6, 6-2 என்ற நேர் செட்களில் தனது சகோத ரியை வீழ்த்தினார். வென்றதும் கட்டி அணைத்து செரினாவை தேற்றுகிறார் வீனஸ்.

# பங்களாதேஷ் அணிக்கு எதிரான பயிற்சிப்போட்டி திலான் சமரவீர அணியை வழிநடத்துவார்




பங்களாதேஷ்- சிறிலங்கா அணிகளுக்கிடையில் இம் மாதம் ஆரம்பமாகவுள்ள இரு கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளுக்கு முன்னதாக நடைபெறவுள்ள பயிற்சிப் போட்டியில் பங்கேற்கும் சிறிலங்கா அணியை வளர்ந்து வரும் அணித்தலைவர் திலான் சமரவீர வழிநடத்துவார் என அறிவிக்கப்படுகின்றது.

வளர்ந்து வரும் அணியின் பயிற்றுனராக ஜெரோம் ஜயவர்ன பணியாற்றுகின்றார். அவரின் எதிர்பார்ப்பு வெளிநாட்டு அணியொன்றுடன் போட்டியிட்டு தனது வளர்ந்துவரும அணியை வெற்றியடைய வைப்பது என அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் சமரவீர தேசிய அணியில் இடம்பிடித்த அனுபவ வீரர் என்பதையும் அவர் மறுக்கவில்லை. அடுத்தது இவ்வணியில் சாந்த கலவெட்டிகொடவும் பங்கேற்கிறார். இவர் நியூசிலாந்து மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான போட்டிகளில் பங்கேற்றிருந்தாலும் சிறப்பாக ஆடவில்லை என்றார். ஜயரத்ன. மற்றும் கயான் விஜேகோன் திலின கடம்பி ஆகியோரும் இந்த அணியில் இடம் பெறுகின்றனர்.

முதலாவது மூன்றுநாள் பயிற்சிப்போட்டி நாளை நடைபெறுகின்றது.

# இந்தியாவுடனான கிரிக்கெட் தொடர் கிப்ஸ், நிக்கிபோயே விலகினர்

இந்தியாவில் நவம்பரில் நடைபெறும் கிரிக்கெட் தொடரிலிருந்து ஹெர்ஷல் கிப்ஸ், நிக்கிபோயே விலகியுள்ளனர்.

2000-2001ஆம் ஆண்டில் இந்தியாவில் நடைபெற்ற கிரிக்கெட் தொடரின்போது சூதாட்டத்தில் ஈடுபட்டதாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதையடுத்து இந்தியா வந்தால் அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்படுமென இந்தியப் பொலிசார் தெரிவித்திருந்தனர்.

இதனாலேயே தென்னாபிரிக்க அணியிலிருந்து அவர்கள் விலகியுள்ளதாகத் தெரிகிறது. அந்நாட்டு கிரிக்கெட் சபையை மேற்கோள்காட்டி இச்செய்தி வெளியாகியுள்ளது.

தென்னாபிரிக்க அணி வரும் நவம்பரில் ஐந்து ஒரு நாள் ஆட்டங்களில் இந்தியாவுடன் விளையாடவுள்ளது.



ஹராரேயில் நடந்த உலகக் கோப்பை தகுதி கால்பந்து சுற்றுப் போட்டியில் சிம்பாப்வே வீரர் பென்ஜன் மாவருவை முந்திக் கொண்டு பந்தை உதைக்கிறார். ருவாண்டா வீரர் ஜோ எலியஸ் (வலது). இந்தப் போட்டியில் சிம்பாப்வே 3-1 என்ற கோல் கணக்கில் வென்றது.

# உலகக் கோப்பை கால்பந்து தொடருக்கு 18ஆவது முறையாக தகுதி பெற்றது பிரேசில்



உலகக் கோப்பைக் கால்பந்து தொடருக்கு, தொடர்ந்து 18ஆவது முறையாக தகுதிபெற்றது பிரேசில் அணி.

ஜேர்மனியில் அடுத்த ஆண்டு உலகக் கோப்பை கால்பந்து தொடர் நடக்கவுள்ளது. இதற்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் உலகின் பல்வேறு இடங்களிலும் நடந்து வருகின்றன. தென்அமெரிக்க நாடுகளுக்கான தகுதிச் சுற்றுப் போட்டி பிரேசிலியா நகரில் கடந்த சனியன்று நடந்தது. இதில் பலம்மிக்க பிரேசில், சிலி அணியை எதிர்த்து விளையாடியது. இப்போட்டியில் பிரேசில் வீரர்கள் அபாரமாக ஆடி 5-0 என்ற கோல் கணக்கில் சிலியை வீழ்த்தினர். நட்சத்திர வீரரான அட்ரியானோ மூன்று கோல் அடித்தார். ராபின்ஹோ, ஜுவான் தலா ஒரு கோல் அடித்தனர். இந்த வெற்றியின் மூலம் பிரேசில் அணி தொடர்ந்து 18ஆவது முறையாக உலகக் கோப்பைத் தொடருக்குத் தகுதி பெற்றது. 1930இலிருந்து நடந்துள்ள அனைத்து உலகக் கோப்பைத் தொடரிலும் விளையாடிய பெருமையையும் பிரேசில் பெற்றுள்ளது.




# வீடியோஹான் வெற்றிக் கிண்ணத்தை நியூசிலாந்து அணி கைப்பற்றியது

சிம்பாப்வேயில் மூன்று நாடுகள் பங்கேற்ற வீடியோஹான் வெற்றிக் கிண்ணத்தை நியூசிலாந்து அணி கைப்பற்றியது.

ஹராரேயில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் நியூசிலாந்துஅணி ஐந்து விக்கெட்டுக்களால் இந்திய அணியைத் தோற்கடித்தது.

முதலில் ஆடிய இந்தியா 49.3 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 276 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் முகமட்கைப் ஆட்டமிழக்காது 93 ஓட்டங்களைப் பெற்றார்.

277 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நியூசிலாந்து அணி 48.2 ஓவரில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் அஸ்ரல் அதிகபட்சமாக 109 ஓட்டங்களைப் பெற்றார்.

(போட்டியின் முழுமையான விபரத்தை நாளைய தினசரியில் எதிர்பாருங்கள்.)







இந்திய விளையாட்டு ரசிகர்களின் நீண்ட கால ஆசை நேற்று முன்தினம் நள்ளிரவு முடிந்துபோனது. யு.எஸ். ஓபன் நான்காவது சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா, ரஷ்யாவின் மரிய ஷரபோவாவை சந்தித்தார். தொடக்கத்தில் போராடிய சானியா இறுதியில் 2-6, 1-6 என்ற செட்களில் தோல்வியைத் தழுவினார். தோற்ற இவருக்கு கைகுலுக்கி ஆறுதல் தெரிவிக்கிறார் ஷரபோவா.



## சிந்தனைக்கு

இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி, கண்ணீர் சிந்தி, தாங்கொணாத் துன்பத்தின் பரிசாகப் பெறுவதுதான் சுதந்திரம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 07.09.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## கொள்கை இருப்பின்...!

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பி.யுடன் கூட்டு வைத்துக் கொள்வதை சனாதிபதி சந்திரிகா ஏற்றுக்கொள்கின்றாரா? அன்றி அதற்கு எதிராகச் செயற் படப்போகின்றாரா? என்பதே இன்று சிறிலங்கா அரசியலில் பெறுமதி மிக்க கேள்வியாக எழுந்துள்ளதொன்றாகும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் – ஜே.வி.பி.க்கும் இடையில் கூட்டணி ஒன்று உருவாவது நல்ல யோசனைதான். ஆனால், அதற்கு சுதந்திரக் கட்சியின் கொள்கைகள் தாரைவார்க்கப்படுதல் கூடாது என்பது சனாதிபதி சந்திரிகாவின் நிலைப்பாடு. ஆகையினால், தற்பொழுது விடைகாண வேண்டிய விவகாரமாக உள்ளது ஜே.வி.பி முன்வைத்துள்ள 12 நிபந்தனைகள் சுதந்திரக் கட்சியின் கொள்கைக்கு உட்பட்டதா? இல்லையா? என்பதே ஆகும்.

ஜே.வி.பி. தற்பொழுது முன்வைத்துள்ள நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு – மகிந்தராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடுவாரேயானால் அவர் ஜே.வி.பி.யின் கொள்கைப் பிரகடனத்தில் சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வென்றதாக இருக்கும். ஏனெனில் இந்நிபந்தனைகள் யாவும் ஜே.வி.பியின் கொள்கைகளை வலியுறுத்துபவையகவுள்ளன.

அது மட்டுமன்றி ஜே.வி.பி.தற்பொழுது முன்வைத்துள்ள நிபந்தனைகள் பல ஏற்கனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியினாலும், சனாதிபதி சந்திரிகாவினாலும் நிராகரிக்கப்பட்டவையாகும். முதலாவது நிபந்தனையாக சுனாமி அனர்த்தப் பொதுக்கட்டமைப்பு கைவிடப்படுதல் வேண்டும் என்ற நிபந்தனையைச் சுட்டிக்காட்டுதல் முடியும்.

இப்பொதுக்கட்டமைப்பை சனாதிபதி சந்திரிகா உருவாக்குவது எனத் தீர்மானம் மேற்கொண்டமையானது, சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும்; சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினதும் தீர்மானத்தின் அடிப்படையிலேயே ஆகும். இந்நிலையில் பொதுக்கட்டமைப்பைக் கைவிடுதல் என்ற ஜே.வி.பியின் நிபந்தனையை ஏற்றுக்கொள்ளுதல் சுதந்திரக்கட்சியும், சனாதிபதியும் தமது கொள்கையைக் கைவிடுதல் ஆகாதா?

அடுத்ததாக சமாதான ஏற்பாட்டாளராக நோர்வேத் தரப்பை அழைத்தவர் சனாதிபதி சந்திரிகாவே . அத்தோடு காலத்திற்குக் காலம் நோர்வே வகிக்கும் பாத்திரத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும். வெளியேற்ற வேண்டும் எனவும் கோரிக்கைகள் எழுந்த போது அதனைப் புறம்தள்ளி நோர்வேயின் பங்களிப்பைத் தொடர அனுமதித்தவர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகும்.

இனப்பிரச்சினை மற்றும் யுத்தநிறுத்தம் தொடர்பான விவகாரங்களில் இத்தகைய முரண்பட்ட போக்கு ஜே.வி.பிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் இருப்பதென்பது ஒருபுறம் இருக்க, சிறிலங்காவின் பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசியலமைப்புத் தொடர்பான நிலைப்பாடுகளுக்குமிடையில் வேறுபாடுகள் இருப்பதும் வெளிப்படையானதே.


குறிப்பாக திறந்த பொருளாதாரக் கொள்கையை முற்றிலுமாக ஏற்றுக்கொண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், சனாதிபதி சந்திரிகாவும் செயற்பட்டுக்கொண்டிருக்கையில், ஜே.வி.பி யோ தனது நிபந்தனைகளில் தனியார் மயமாக்கலுக்கு பலத்த எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

இத்தகையதொரு நிலையில் தற்பொழுது எழும் கேள்வியானது இவ்விரு கட்சிகளுக்கும் இடையிலான இம்முரண்பாடுகள் குறித்துச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார்? என்பதே. அதாவது ஜே.வி.பி.யின் நிபந்தனைகள் சுதந்திரக்கட்சியின் கொள்கைக்கு உட்பட்டதா? அன்றி உட்படவில்லையா? அன்றி கொள்கை உடன்பாடுகள் இன்றி இரு கட்சிகளுக்கும் இடையில் உடன்பாடு காணப்பட முடியுமா? என்பதே ஆகும்.

ஜே.வி.பி.யின் கொள்கைகள் சுதந்திரக் கட்சியின் கொள்கைக்கு உட்பட்டதாகவே உள்ளதெனச் சனாதிபதி சந்திரிகா ஏற்றுக் கொள்வாரேயானால், சுதந்திரக் கட்சிக் கொள்கை எதுவும் அற்ற கட்சி என்பதை சனாதிபதி சந்திரிகாவே ஏற்றுக்கொள்வதாகிவிடும். அதாவது கடந்த காலத்தில் ஜே.வி.பி.யுடன் அவருக்கு ஏற்பட்ட முரண்பாடுகள் அர்த்தமற்றவை என்பது மட்டுமல்ல, வீம்பிற்காக அவரால் உருவாக்கப்பட்டவை என்றும் ஆகிவிடும்.

மற்றொரு புறத்தில் சனாதிபதி சந்திரிகா இவ்இணக்கப்பாட்டை ஏற்பதானது ஜே.வி.பிக்கு அடிபணிந்ததுமாகிவிடும். இது சனாதிபதி சந்திரிகாவின் தன்மானத்தை இழக்கச் செய்ததாகிவிடும். ஆனால், அதற்காக சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பி.யுடனான உறவிற்கு முட்டுக்கட்டை போட்டுவிடுவார் என இங்கு கூறுவதற்கு வரவில்லை. சனாதிபதி சந்திரிகாவின் கடிவாளத்திற்கு மகிந்தராஜபக்ஷ கட்டுப்பட்டு விடுவார் என்றும் எதிர்பார்ப்பதற்கும் இல்லை.

இந்நிலையில் தற்பொழுது உள்ள கேள்வி சனாதிபதி சந்திரிகா சுதந்திரக் கட்சியின் கொள்கையை ஜே.வி.பி.யின் நிபந்தனைகளுக்கு எதிரானவை எனக் கூறி ஜே.வி.பியுடனான உடன்பாட்டிற்கு எதிராகச் செயற்படுவாரா? அன்றி சு. கட்சியின் கொள்கையை மாற்றித் தன்னையும், மாற்றிக்கொண்டு, ஜே.வி.பி.யின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வாரா? அன்றி கொள்கை முரண்பாடுகளுக்குத் தீர்வு காணாமல் மீண்டும் ஒரு கூட்டணியை ஏற்படுத்துவார்களா? என்பதே ஆகும். ஆனால் இதனை அறிந்துகொள்ள இன்னும் சில நாட்களே தேவையாக இருக்கும்.




# அரசின் வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடிக்க ஐ.தே.க.நடவடிக்கை!

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தை தோல்வியடையச் செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க இது தொடர்பில் ஏனைய அரசியல் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சனாதிபதித்தேர்தலுக்கு முன்னர் சிறிலங்கா அரசாங்கம் வரவு செலவுத்திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் இதனை தோல்வியடையச் செய்வதன் மூலம் சனாதிபதித்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவிற்கான வெற்றி வாய்ப்பினை அதிகரிக்க முடியும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கை வெளியிட்டுள்ளது. இதே வேளை வரவு செலவுத் திட்டத்தை தோல்வியடையச் செய்வதற்கான நடவடிக்கைக்கு ஜாதிகஹெல உறுமயவின் ஆதரவைப்பெறும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (32)

# ஜே.வி.பி யுடனான சந்திப்புக் குறித்து சனாதிபதிக்கு விளக்க மகிந்த முயற்சி

(கொழும்பு)

ஜே.வி பி.யுடன் நடைபெற்ற சந்திப்புத் தொடர்பில் சனாதிபதிக்கு விளக்கமளிப்பதற்கு பிரதமர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிய வந்துள்ளது. சனாதிபதிக்குத் தெரியப்படுத்தப்படாமல் இரு தடவைகள் பிரதமர் ஜே.வி.பி.யினரைச் சந்தித்து பேசியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் ஏற்பாட்டில் முதலாவது சந்திப்பு கதிர்காமர் படுகொலை செய்யப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் நடைபெற்றிருந்தது. இந்தச் சந்திப்பிற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டமை தொடர்பில் கதிர்காமருடன் சனாதிபதி கடும் விசனம் கொண்டிருந்த நிலையில் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டார்.

இதனை அடுத்து அமைச்சர்களான மங்கள சமரவீர, சுசில் பிரேமஜயந்த, நிமல் சிறிபால டி.சில்வா, மைத்திரிபால சிறிசேன ஆகியோருடன் பிரதமர் ஜே.வி.பி யினரை அலரி மாளிகையில் சந்தித்துப் பேசினார். இதன்போது பிரதமருக்கு ஆதரவளிக்க ஜே.வி.பி இணக்கம் தெரிவித்திருந்தது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக சனாதிபதிக்கு முன் கூட்டியே தெரியப்படுத்தப்படவில்லை என்றும், இது தொடர்பில் அவர் கடுமையான விசனம் அடைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இவ்வாரம் இந்தச் சந்திப்பிற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு சனாதிபதி செயலகத்திடம் கோரியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. பிரதமரின் இந்தக் கோரிக்கைக்கு சனாதிபதி செயலகம் இதுவரை சாதகமான பதில் எதனையும் வழங்கவில்லை என்றும் தெரியவருகின்றது. (32)

# சனாதிபதித்தேர்தலில் வெற்றிபெற்றால் ஆட்படுகொலை சம்பவங்கள் நடைபெறாது

### – பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

(கொழும்பு)

சனாதிபதித்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி வெற்றிபெற்றால் ஆட்படுகொலைச் சம்பவங்கள் நடைபெறாது என்று அக்கட்சி வேட்பாளரும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

கன்னங்கராவில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் அவர் பேசியதாவது;

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்டது சரிதான். ஆனால் அதில் நிறைய பிரச்சினைகள் உள்ளன. அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியது முதன்மைப் பணி. இங்கே யாரும் போருக்கு தயாராக இல்லை. அனைவரும் அமைதியாகவும், கௌரவத்துடனும் வாழவே விரும்புகிறார்கள்.

நாட்டின் வளர்ச்சி என்பது தென்னிலங்கையோடு மட்டுமானது அல்ல. வடக்கு கிழக்கையும் சேர்த்ததுதான். அனைத்துப் பிரதேசங்களிலும் வளர்ச்சியை உருவாக்க வேண்டியது ஒரு அரசின் கடமை.

நான் கிராமத்திலிருந்து பிறந்து வளர்ந்தவன். ஆகவே கிராம மக்களின் அபிலாசைகளை செயற்படுத்துவோம்.

சனாதிபதித்தேர்தலை வன்முறைகளின்றிச் சந்திப்போம். தேர்தலுக்குப் பிறகு அரசியல் ஆட்படுகொலைகள் எதுவும் இருக்காது. அனைத்து மக்களும் சுதந்திரமாக நடமாடலாம்.

சனாதிபதித்தேர்தல் இந்த நாட்டிற்கு மிக முக்கியமானது. ஐக்கிய தேசியக் கட்சியானது நாட்டைப் பல ஆண்டுகாலம் ஆண்டுள்ளது. தற்போது பொதுஜன ஐக்கிய மக்கள் முன்னணி ஆட்சி செய்து வருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்கும் எமது ஆட்சிக்கும் உள்ள வேறுபாட்டை மக்கள் நன்கு உணருவார்கள். கடந்த 1988 - 89 ஆம ஆண்டுகால ஐ.தே.க. ஆட்சியில் 60 ஆயிரம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அந்தக் காலத்தில் நாம் பேசுவதற்குகூட தடை விதிக்கப்பட்டவர்களாக இருந்தோம்.

ஆனால் இன்று ரணில் போன்றவர்கள் பாதயாத்திரை கூட நடத்த முடிகிற அளவுக்கு நிலைமை[illegible] நாங்கள் மாற்றியமைத்[illegible]ளாம் என்றார் மகிந்த ராஜபக்ஷ.

# சு.க.வின் மூத்த உறுப்பினர்கள் ஐ.தே.கட்சிக்கு ஆதரவளிக்க முடிவு!

### – ராஜிதசேனாரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் பழைய உறுப்பினர்கள் பலர் ஐக்கியதேசியக் கட்சிக்கு ஆதரவளிக்கவுள்ளதாக ஐக்கியதேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித[illegible]னாரட்ண தெரிவித்துள்ளார்.

இந்தக் கட்சி[illegible]தரவாளர்கள் உள்ள பல பிரதேசங்களுக்கு சென்றதாகவும் குறிப்பா[illegible] லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பி[illegible]கள், ஆதரவாளர்கள் பலர் முதன் முறையாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளதாகவும் சனாதிபதித் தேர்தலில் ஒரு முக்கிய மாற்றம் என்றே கருதவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (32)

# யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கு கிளிநொச்சியில் அடிக்கல் நாட்டல்


படம்:- சோதி

(அலுவலக செய்தியாளர்)

யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கான அடிக்கல்நாட்டும் நிகழ்வு நேற்று பகல் பத்து மணிக்கு கிளிநொச்சி அறிவியல் நகரில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி இராஜதுரை தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் மோகனதாஸ் கலந்து கொண்டு யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கான அடிக்கல்லினை நாட்டிவைத்து நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் நிகொட் திட்ட பணிப்பாளர் ரி.இலங்காநேசன், வவுனியா வளாக முதல்வர் பேராசிரியர் திருமதி ஆர். மகேஸ்வரன், தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், தமிழீழ கல்விக்கழகப்பொறுப்பாளர் வெ. இளங்குமரன், கிளிநொச்சி மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி மற்றும் அனைத்து பல்கலைக்கழக பீடாதிபதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொண்டு அடிக்கல்லினை நாட்டிவைத்தனர்.

அதேபோன்று நேற்றுப் பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சி மத்திய கல்லூரி வளாகத்தில் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கல்லூரி அதிபர் இராஜமகேந்திரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் மங்கல விளக்கினை தமிழீழ கல்விக்கழக கிளி/மாவட்டப் பொறுப்பாளர் அறிவன்பன் ஏற்றி வைக்க தமிழீழ கல்விக்கழக பொறுப்பாளர் வெ. இளங்குமரன் புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லினை நாட்டிவைத்தார். தொடர்ந்து கிளிநொச்சி அரச அதிபர், நிக்கொட் திட்டப்பணிப்பாளர் மற்றும் பலர் கலந்து கொண்டு அடிக்கல்லினை நாட்டிவைத்தனர். மேற்படி வைபவத்தில் சமய அனுட்டானங்களை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய பிரதம குரு இரத்தினேஸ்வரக்குருக்கள் நடாத்தி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நிகொட் கருத் திட்டத்தில் 175 மில்லியன் ரூபா செலவில் விவசாயபீடமும், 94 மில்லியன் ரூபா செலவில் மத்திய கல்லூரிக்கான புதிய கட்டடமும் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# தமிழீழ அரும்பொருள் காப்பு நடுவத்தினால் கிளி. நகரில் தொல்லியற் பொருட்கள் மீட்பு

கிளிநொச்சி நகர்ப் பகுதியில் புதிதாகவெட்டிய கிணறுஒன்றிலிருந்து மிகவும் பழமை வாய்ந்த தொல்லியற் பொருட்கள் தமிழீழ அரும்பொருள் காப்பு நடுவத்தினரால் மீட்கப்பட்டது.

கிளிநொச்சி 4ஆம் வாய்க்கால் பகுதியிலுள்ள மருதநகர் கிராமத்தில் பல காலமாக வசித்துவந்த மாரிமுத்து விசுவநாதன் குடும்பத்தினர் நேற்று முன்தினம் தமது காணியில் புதிதாக கிணறு வெட்டும் போது மட்பாண்டப் பொருட்கள் இருப்பதைக் கண்டனர் வீட்டு உரிமையாளர் கிணறு வெட்டும் தனது செயலைநிறுத்திவிட்டு கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ அரும்பொருள் காப்பு நடுவப்பணியகம் சென்று கிணற்றில் இருப்பது தொல் பொருளாக இருக்கும் என்பதை உணர்ந்து தேசிய நலனிற்கான நோக்கோடு கிணற்றில் காணப்பட்ட மட்பாண்டங்கள் பற்றித் தெரியப்படுத்தினார்.

இதனை அடுத்து அரும் பொருள் காப்பு நடுவப்பணியகப் பொறுப்பாளர் சி.ஆதித்தவர்மன் மற்றும் தொல்லியல் பொருட்கள் தேடல் குழு ந.குணரட்ணம் தலைமையில் உரிய இடத்திற்குச் சென்று நேற்று முன்தினம் காலை தொடக்கம் மாலைவரை ஆய்வுகள் மேற்கொண்டு பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் எமது முன்னோர் பாவனையில் இருந்த தொல்லியற் பொருட்களான நான்கு கால் களையுடைய கருங்கல் அம்மி மற்றும் சுடு மண்ணினால் ஆன மட்பாண்டங்கள், சமையல் பாத்திரங்கள், முன்னோர் பாவித்த மணிகள் அணிகலன்கள் எனப பல பொருட் களைக் கிணற்றின் சுவரில் இருந்து மீட்டனர்.


படம்:- வதனன்

தொல்லியல் பொருட்கள் மீட்பு நடவடிக்கையின் போது தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் மற்றும் தமிழீழ அரும்பொருள் காப்பு நடுவப்பணியகப் பொறுப்பளார் சி.ஆதித்தவர்மன் வீட்டு உரிமையாளர் விசுவநாதன் அயலவர்கள் எனப்பலரும் சமுகமாகி இருந்தனர்.

தமிழீழப் பகுதி எங்கேனும் தொல்லியற் பொருட்கள் காணப்படும் போது மக்கள் எமது தேச நலன் கருதி கிளிநொச்சி நகர்ப் பகுதியில் அமைந்துள்ள அரும் பொருள் காப்பகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ அரும்பொருள் காப்பு நடுவப்பணியகப் பொறுப்பாளர் சி.ஆதித்தவர்மன் கேட்டுள்ளார்.(46)

## இரு...

றையவர் முத்துவேல் ஜெகதீபன் (வயது-19) என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்விரு இளைஞர்களும் ராகமையிலுள்ள பிளாஸ்டிக் தயாரிப்பு நிறுவனமொன்றில் வேலை செய்து வந்துள்ளனர். முஸ்லிம் இனத்தவரான இந்நிறுவனத்தின் உரிமையாளரே இவ்விருவரது சடலங்களையும் அடையாளம் காட்டியதாக ராகமப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் மாலை வானொன்றில் வந்த ஏழு பேர் இந்த இருவரையும் அழைத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. ராகமப் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜே.வி.பி யுடன்..

வேண்டும் எனவும் ஒற்றையாட்சி முறையின் கீழ்த்தான் தமிழர்களுடைய பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் போன்ற பலவிடயங்களுடன் இடைக்கால நிர்வாக அலகுசம்பந்தமாக முற்றாகப் பேசக் கூடாது என்ற அடிப்படையில் ஜே.வி.பி முன் வைத்துள்ள இந்தக்கோரிக்கையை பிரதமர் ஏற்று சனாதிபதித்தேர்தலில் போட்டியிடுவதானது தமிழ் மக்களுடைய பிரச்சினையை நல்ல முறையில் அணுகாமல் மீண்டும் இந்த நாட்டிலே யுத்தச் சூழலை ஏற்படுத்துவதற்காக முயல்கின்றார்கள் என்றே கருதமுடிகின்றது எனவும் அவர் மேலும் கூறினார்.

இந்நிலையில் மகிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரது நிலைப்பாடுகள் குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆராய்ந்து வருவதாக மற்றொரு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் கூறியுள்ளார்.

சிறிலங்கா சனாதிபதித்தேர்தல் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து ஒரு பொது நிலையை எமது கூட்டமைப்பு மேற்கொள்ளும் என்றும் தமிழீழ விடுதலைப்புலிகளுடனான சந்திப்புக்குப் பிறகு எமது நிலைப்பாடு அறிவிக்கப்படும் என்றும் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இதர சிறுபான்மை அமைப்புக்களுடன் இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆலோசனை நடத்த உள்ளதாக கூட்டமைப்பின் மூத்த பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

இருப்பினும் இரு தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களின் நிலைப்பாடுகள் குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடும் அதிருப்தியில் இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இரு கட்சி வேட்பாளர்களும் நாள் தோறும் வெவ்வேறு விதமான கருத்துக்களைத் தெரிவித்து வருவதால் கூட்டமைப்பினர் விசனத்தில் உள்ளதாகவும் கூட்டமைப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

# ஏ—9 வீதியூடாக பயணித்த இராணுவ கப்டன் கைது!

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் ஊடாக யாழ்ப்பாணம் சென்று திரும்பிய சிறிலங்கா இராணுவ கப்டன் ஒருவரும் அவருடன் பயணம் செய்த இரு தமிழர் உட்பட மேலும் மூவருமாக நேற்று முன்தினம் மாலை ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் பணியாற்றும் இந்த இராணுவ கட்டனுடன் கைது செய்யப்பட்ட நான்காவது நபர் கண்டியைச் சேர்ந்த சிங்களப்பெண் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# கப்பம் வழங்க மறுத்தமையால் விடுதி மீது கைக்குண்டு வீச்சு!

### அநுராதபுரத்தில் சம்பவம்

அநுராதபுரத்தில் உள்ள விடுதியொன்றின் மீது நேற்று முன் தினம் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அநுராதபுரம் பொதுச் சந்தைப் பகுதியில் உள்ள விடுதியொன்றிற்கு இரவு 10.30 மணியளவில் வந்த இனந் தெரியாத சிலர் விடுதி உரிமையாளரிடம் கப்பம் கேட்டுள்ளனர். கப்பம் வழங்க மறுத்த உரிமையாளருக்கும வந்த நபர்களுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டதையடுத்து கப்பம் கேட்டு வந்தவர்கள் விடுதி மீது கைக்குண்டை வீசியுள்ளனர்.

இச்சம்பவத்தில் எவரும் பாதிக்கப்படவில்லை. எனினும் விடுதிக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் பொலிசார் மூவரைக் கைது செய்துள் ளனர்.

இம்மூவரும் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

# ரணிலை ஆதரிக்க மு. கா. முடிவு

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்குதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம் காங்கிரஸ் விடுத்த வேண்டுகோள்களிற்கு ரணில் விக்கிரமசிங்க இணங்கியதை அடுத்தே அவரிற்கு ஆதரவு வழங்குதற்கு முஸ்லிம் காங்கிரஸ் முடிவு செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், முஸ்லிம் காங்கிரசிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. இன்னும் ஒரு சில வாரங்களிற்குள் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மீள்குடியமர அனுமதி கோரி கண்காணிப்புக் குழுவுக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலிகாமம் வடக்கு மயிலிட்டிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களிலுமுள்ள அகதிமுகாம்களில் வாழ்ந்து வரும்மக்கள் தம்மை தமது சொந்த இடங்களில் மீளக்குடி யமர அனுமதிக்கக் கோரி இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினிடம் மகஜர்களைக் கையளித்துள்ளன.

போர் நிறுத் கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்ட செயலகத்தில்வைத்தே இம்மகஜர்களை நேற்று பொதுமக்கள் கையளித்துள்ளனர்.

இவ்வாறு தமது மீள்குடியமர்வுக் கோரிக்கைகளை வலியுறுத்தும் விதமாக நேற்று 26 மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

கடந்த 14ஆண்டுகளாக வலி. வடக்கு மக்களை மீளக்குடியமர்த்தும் விவகாரத்தை இன்று, நாளை என மாறி மாறிவரும் அரசாங்கங்கள் ஏமாற்றி வருகின்றன. இந்நிலையில் இலங்கை அரச தலைமைகளால் எமது மீள்குடியமர்வு சாத்தியப்படும் என்ற நம்பிக்கையை நாம் இழந்துள்ளோம்.

எனவே, தமிழீழ தனி அரசை சர்வதேசம் அங்கீகரிப்பதே எமதுசாத்தியப்பாடான மீள்குடியமர்வுக்கு ஒரே வழி என இம்மகஜர்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. (33)

## வீரச்சாவு...

(குமாரசாமி - மோகனதாஸ், ஏரிக்கரை வீதி, ஜோரகலிமடு, கிரான், மட்டக்களப்பு. த.முகவரி ஆளையடிச்சேனை பிள்ளையார் கோயிலடி, மட்டக்களப்பு) என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார். இம் மாவீரருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## சிறிலங்கா...

வர்களால் மங்களம் மாஸ்டர் என்பவரால் நடத்தப்பட்டதாகத் தெரிவித்தனர். இவர் இராணுவப்புலனாய்வுத் துறையுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதலில் வினோத், சாரங்கன், சிவா ஆகிய போராளிகளே வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

இவர்களது வித்துடல்கள் திருமலை சம்பூர் அரசியல்துறை பணிமனையில் வைக்கப்பட்டுள்ளன.

## புலிகளின்..

தந்த குழுக்களும் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துள்ளனர். செயலகத்திற்குள் சென்று அங்கிருந்த ஆவணங்களை எடுத்து எரித்துவிட்டுச் சென்றுள்ளனர்.

## ஜே.வி.பி.

ருப்பதாலும் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடாதிருப்பதாலும் விடுதலைப்புலிகள் போரை முன்னெடுத்தால் கூட அது நியாயமானது என்று சர்வதேசம் ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழலை ஏற்படுத்தும் அளவுக்கு ஜே.வி.பி மகிந்தராஜபக்ஷ கூட்டு அமைந்திருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (32)

வவுனியாப் பிரகடனத்துக்கு வலுச்சேர்க்க முல்லையிலும் பேரெழுச்சி

முல்லை. மாவட்ட எழுச்சிநாள் செயலணி

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.